Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

விலை: ரூபா 7.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

புதுப்பொலிவுடன் திருநெல்வேலியில்
WESTERN UNION பணப் பரிமாற்றம்
விரைவானது பாதுகாப்பானது நம்பகமானது
இப்பொழுது உலகின் எப்பாகத்திலிருந்தும் மிக துரிதமாக பணத்தினை பெற்றுக்கொள்வதற்கு
- பணம் பெறுவதற்கு வங்கிக்குப் போகத்தேவையில்லை
- வங்கிக் கணக்கு அவ்சியமில்லை
- நீடிக்கப்பட்ட சேவை நேரம்
- 365 நாள் சேவை
- 10 (MTCN) இலக்கங்களைப் பெற்றவுடன் எம்மை நாடவும்
THIRUMURUGAN COM, NET
T.P: 021-222 7310
021-222 7555
021-222 7560
Fax: 021-222 7310
E-mail: thirumurugan@eudoramail.com
46, ஆடியபாதம் வீதி, (ப.நோ.கூ.ச. முன்பாக) திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 வைகாசி 15 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ர.ஆசிர் 08 (28.05.2004) வெள்ளிக்கிழமை இதழ் :239

# வெளிப்படையான பேச்சுக்கு தயாரென சொல்ஹெய்மிடம் ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

**இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக விடுதலைப் புலிகளுடன் வெளிப்படையாக பேச்சுக்களை நடாத்துவதற்கு தமது அரசாங்கம் தயாராக இருப்பதாக ஜனாதிபதி சந்திரிகா நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்மிடம் தெரிவித்தார்.**

**நேற்றிரவு 7 மணியளவில் ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற சந்திப்பின் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.**

**ஜனாதிபதியுடனான சந்திப்பில் நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரஸ்கரும் கலந்துகொண்டார்.**



அரச தரப்பில், வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் சமாதான செயலகப் பொறுப்பாளர் ஜயந்த தனபால, வெளிவிவகாரச் செயலாளர் எஸ்.பாலிஹகார ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இதன்போது, விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க விருப்பம் தெரிவித்த ஜனாதிபதி சூழ்நிலை, காலம், திட்டங்கள் குறித்தும் ஆராய்ந்தார்.

கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை சந்தித்தபோது, யுத்த நிறுத்தத்திற்கு விடுதலைப் புலிகள் பூரண ஆதரவுதர உறுதியளித்திருப்பதையும் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுவது குறித்த புலிகளின் நிலைப்பாட்டையும் எரிக்சொல்ஹெய்ம் ஜனாதிபதியிடம் தெளிவாக எடுத்துக்கூறினார்.

சமாதானப் பேச்சுக்களை விடுலைப் புலிகளுடன் நடாத்துவதற்கு அரசு தயாராக இருப்பதாகவும் பேச்சுக்களை வெளிப்பாடையாக நடாத்துவதற்குத் தாம் தீர்மானித்திருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளுடன் நடைபெறும் பேச்சுக்களில் முரண்பாடுகள், கருத்து வேறுபாடுகள் இருப்பின் அரசில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளுடனும் விவாதிப்பதற்கு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கன்ரர் - சைக்கிள் விபத்தில் வவுனியாவில் குடும்பஸ்தர் பலி

(வவுனியா)

வவுனியா - ஓமந்தைப் பகுதியில் நேற்று மாலை சைக்கிள் ஒன்றுடன் கன்ரர் ஒன்று மோதியதில் சைக்கிளில் பயணம் செய்த குடும்பஸ்தர் பலியானார்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை மூன்று மணியளவில் இடம்பெற்றது. இதில் வவுனியா காயாங்குளத்தைச் சேர்ந்த டேவிட் யேசுதாசன் (வயது 34) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தவராவர்.

உயிரிழந்தவரை மோதிய கன்ரர் வாகனம் சம்பவ இடத்திலிருந்து தப்பிச் செல்ல முற்பட்டவேளை வவுனியாப் பொலிஸாரால் மடக்கிப் பிடிக்கப்பட்டது.

அத்துடன் கன்ரர் வாகனத்திலிருந்த மூவரைக் கைதுசெய்த பொலிஸார், வாகனத்தையும் தடுத்துவைத்துள்ளனர்.

## சுவர் இடிந்து வீழ்ந்து தாயும் மகளும் பலி

(வவுனியா)

கடும் மழைகாரணமாக வீட்டின் சுவர் இடிந்து விழுந்ததில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாயும் மகளும் உயிரிழந்ததுடன் மூவர் படுகாயமடைந்தனர்.

இந்தப் பரிதாபச் சம்பவம் நேற்று மாலை மூன்று மணியளவில் வவுனியா குருக்கள் புதுக்குளம் பகுதியில் நடைபெற்றது.

இந்தச் சம்பவத்தில் கனகலிங்கம் லூசியா (வயது 30) என்ற இளம் தாயும் அவரது மகளான க.திவ்யா (வயது 7) என்ற இருவருமே மண்ணில் புதையுண்டு உயிரிழந்தவர்களாவர்.

இதே சம்பவத்தில் இதே குடும்பத்தைச் சேர்ந்த க.சிந்துஜா (வயது 5), க.சுலக்சனா (வயது 4), க.பகீரதன் (வயது 3) ஆகிய மூன்று சிறுவர்களும் படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப் பட்டனர்.

## உதவி வழங்கும் நாடுகள்

# சமாதானப் பேச்சை ஆரம்பிக்க அரசுக்கு அழுத்தம் கொடுக்கும்!

## அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்க வேண்டுமென இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் அரசிடம் வலியுறுத்தப் போவதாக - அமெரிக்க இராஜங்கத் திணைக்களத்தின் பேச்சாளர் றிச்சட் பௌச்சர் நேற்று

பிரெஷ்லெஸ்லில் அடுத்த மாதம் முதலாம் திகதி நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டில் நோர்வே, ஜப்பான், ஐரோப்பிய யூனியன், அமெரிக்கா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொள்வர்.

இதன், போது போரினால் பாதிப்படைந்த இலங்கையை மீள கட்டியெழுப்புவதற்கான

முயற்சிகளை மீள ஆரம்பிப்பதற்கு இந்த நாடுகள் அரசை வலியுறுத்துவதுடன், தமது ஆதரவை வெளிப்படையாக தெரிவிக்கவுள்ளன.

இந்த மாநாடு ரோக்கியோவில் நடைபெற்ற உதவிவழங்கும் மாநாட்டின் தொடர்ச்சியாகவே இடம்பெறவுள்ளது.

ஐரோப்பிய யூனியனின் வெளிவிவகார ஆணையாளர் கிறிஸ் பற்றன் தலைமையில் நடைபெறும் இந்த மாநாட்டில் அமெரிக்க அரசின்

வருமே மண்ணில் புதையுண்டு உயிரிழந்தவர்களாவர்.

இதே சம்பவத்தில் இதே குடும்பத்தைச் சேர்ந்த க.சிந்துஜா (வயது 5), க.சுலக்சனா (வயது 4), க.பகீரதன் (வயது 3) ஆகிய மூன்று சிறுவர்களும் படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

இவர்களில் ஆபத்தான நிலையிலுள்ள

(12 ஆம் பக்கம் பார்க்க)

(கொழும்பு)

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்க வேண்டுமென இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் அரசிடம் வலியுறுத்தப் போவதாக - அமெரிக்க இராஜங்கத் திணைக்களத்தின் பேச்சாளர் றிச்சட் பௌச்சர் நேற்று முன்தினம் அறிவித்தார்.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு பெல்ஜியத்தின் தலை நகரான பிரெஷ்லெஸ்லில் அடுத்த மாதம் முதலாம் திகதி நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டில் நோர்வே, ஜப்பான், ஐரோப்பிய யூனியன், அமெரிக்கா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொள்வர்.

இதன், போது போரினால் பாதிப்படைந்த இலங்கையை மீள கட்டியெழுப்புவதற்கான மனிதாபிமான உதவிகள் குறித்து ஆராயப்படவிருக்கின்றது.

இதன்போது தடைப்பட்டுள்ள சமாதான ஆதரவை வெளிப்படையாக தெரிவிக்கவுள்ளன.

இந்த மாநாடு ரோக்கியோவில் நடைபெற்ற உதவிவழங்கும் மாநாட்டின் தொடர்ச்சியாகவே இடம்பெறவுள்ளது.

ஐரோப்பிய யூனியனின் வெளிவிவகார ஆணையாளர் கிறிஸ் பற்றன் தலைமையில் நடைபெறும் இந்த மாநாட்டில் அமெரிக்க அரசின் சார்பாக அந்த நாட்டின் பிரதி இராஜாங்கச் செயலாளர் றிச்சட் ஆர்மிரேஜ் கலந்துகொள்வார்.

- இவ்வாறு பௌச்சர் தெரிவித்தார்.

# அடுத்த இருமாதங்களுக்குள் ஆயிரம் ஆசிரியர் நியமனம்

## கல்வி அமைச்சு அதிகாரி தெரிவிப்பு

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய ஆயிரம் ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்படவுள்ளன. இரண்டு மாதங்களுக்குள் இந்த நியமனங்கள் வழங்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த டிசம்பர் மாதம் இதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. தகுதிகாண் போட்டிப் பரீட்சை நடாத்துவதற்கான நிலையங்களை வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள மாவட்டங்களிலும் ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டது. அதனால், போட்டிப் பரீட்சை நடாத்தும் நடவடிக்கைகள் தாமதமடைந்தன.

விண்ணப்பதாரிகளுக்கான தகுதிகாண் போட்டிப் பரீட்சையை விரைவில் நடாத்தி, இரண்டு மாதங்களுக்குள் நியமனங்களை வழங்க வேண்டுமென்று கல்வி அமைச்சின் செயலாளர் பணிப்புரை விடுத்துள்ளார். அதனடிப்படையில் போட்டிப் பரீட்சையை விரைவில் நடாத்தி குழுமுறையில் வினாத்தாள் திருத்தி பெறுபேறுகளை அறிவிக்க பரீட்சைத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துவருகின்றது.

### மணலாறு பகுதியிலிருந்து

## இரண்டு இராணுவத்தினர் காணாமல் போயுள்ளனர்

(கொழும்பு)

மணலாற்றில் உள்ள இராணுவத்தினரின் முன்னரங்க காவலரண் பகுதியிலிருந்து இரண்டு இராணுவத்தினர் காணாமற்போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. காமினி பண்டார, மற்றும் சரத் குணசேன ஆகிய இரு இராணுவத்தினருமே காணமற் போனவர்களாவர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# நிவாரணம் வழங்கத் தவறின் யாழ். செயலகம் முன் மறியல்!

## பொது அமைப்புக்களின் ஒன்றியம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டு மக்களுக்கு வழங்கப்பட்டு வந்த நிவாரணத்தை உடனடியாக வழங்கத் தவறின் யாழ்.செயலகம் முன் தொடர்ச்சியான மறியல் போராட்டம் நடத்தப் போவதாக யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

நிவாரணப் பொருட்களை உடனடியாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரி மேற்படி பொது அமைப்பினால், நேற்றுமாலை வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச் செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ். மாவட்டத்தில் போரினால் பாதிக்கப்பட்டு இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பமுடியாமல் பசியும், பட்டினியுமாக அவல வாழ்வை அனுபவித்துக்கொண்டிருக்கும் மக்களுக்கு வழங்கப்பட்டு வந்த உலர் உணவு நிவாரணம் கடந்த நான்கு மாதங்களாக வழங்கப்படவில்லை. இதனால் நிவாரணத்தைப் பெறும் குடும்பங்கள் கடும் நெருக்கடியில் சிக்கியுள்ளன.

வவுனியா, கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில் மார்ச் மாதம் வரை நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன. எனினும், யாழ்ப்பாணத்தில் தை மாதத்திற்குப் பின் நிவாரணம் வழங்கப்படவில்லை. இதற்கு அரச அதிகாரிகளின் அசமந்தப் போக்கே காரணம் என பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

எங்களுக்குரிய உலர் உணவு நிவாரணத்தை கால தாமதமின்றி வழங்கவேண்டும்.

(12 ஆம் பக்கம் பார்க்க)



# யாழ்.பல்கலைக்கழகத்திற்கு மேலும் 78 மாணவர்கள் அனுமதி

பல்கலைக்கழகங்களில் உள்ள வெற்றிடம் நிரப்பும் பட்டியலின் மூலம் யாழ்.பல்கலைக்கழகத்திற்கு 2003/2004 ஆம் ஆண்டிற்கான பௌதீக விஞ்ஞானம், உயிரியல் விஞ்ஞானம், விவசாய விஞ்ஞானம் ஆகிய கற்கை நெறிகளுக்கு மேலும் 78 மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

விஞ்ஞான பீடத்திற்கு உயிரியல் விஞ்ஞான கற்கை நெறிக்கு 31 மாணவர்களும், பௌதீக விஞ்ஞான கற்கைநெறிக்கு 24 மாணவர்களும், விவசாய விஞ்ஞான பீடத்திற்கு 23 மாணவர்களும் வெற்றிடம் நிரப்பும் பட்டியல் மூலம் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். தெரிவு செய்யப்பட்ட மாணவர்களது பெயர்கள் வருமாறு,

### உயிரியல் விஞ்ஞானம்

செல்வி எஸ்.பொன்னம்பலம், கே.தமிழினி, செல்வி எம்.பி.தங்கவடிவேல், என்.அகூமத், செல்வி.கே.அருணாசலம், வி.கோகுலன், செல்வி கே.ஜெகதீஸ்வரன், செல்வி என்.நடராஜா, ரி.கோகுலன், செல்வி எஸ்.குணசிங்கம், செல்வி கே.துரைசிங்கம், செல்வி ரி.சுப்பிரமணியம், செல்வி வை.வெள்ளியம்பலம்

எஸ்.சசிகலா, செல்வி.இ.சிவசுப்பிரமணியம், எஸ்.றேகன், எம்.ரஜீவன், ஏ.ஏ.நெவின், செல்வி எஸ்.சின்னத்துரை கே.கிருபாளினி, செல்வி ஏ.பரமேஸ்வரன், செல்வி ரி.நாகராஜா, வி.கேனுகா, வி.சிவதர்சினி, யு.அஜித்தா, பி.கார்த்திகேயன், செல்வி எச்.சுந்தரலிங்கம், எஸ்.வசீகரன், கே.ஜோதிப்பிரகாஷ், எஸ்.சுபாஸ்கரன், ஆர்.அஜந்தா.

### பௌதீக விஞ்ஞானம்

எஸ்.கஜேந்திரன், எஸ்.சத்தியன், ஜி.செந்தூரன், எம்.கஜன், யு.ராகுலன், வி.அகிலன் செல்வி ஜே.மகேஸ்வரன்,எஸ்.சிவசுதன்,செல்வி எஸ்.சண்முகநாதன்,வி.ஆர்.சுகிர்தன், ஆர்.டொமினிக், எஸ்.ஆரூரன், எஸ்.முரளிதரன், செல்வி. எஸ்.தியாகராஜா, எஸ்.கலாமோகன் எஸ்.குருபரன், செல்வி.எஸ்.தருமராஜா, எஸ்.அமலராஜன், செல்வி எஸ்.ஏகாம்பரம், கே.பார்த்தீபன், ரி.பி. சுஜீந்திரன், டி.சி.கேமன்ராஜ்

### விவசாய விஞ்ஞானம்

இ.பி.ரஜீவன், வை.கணாதரன், செல்வி.என்.சிவலோகநாதன், எஸ்.சத்தியரூபன், செல்வி ஆர்.விமலச்சந்திரன், செல்வி கே.மகாலிங்கம், எஸ்.சசிரேகா,செல்வி ஆர்.வசந்தரூபன், செல்வி ஆர்.சிவபாதம், செல்வி.என்.பேரின்பநாயகம், ஏ.போஜினி, செல்வி எஸ்.பரம்சோதி, ஏ.சண்முகதாஸ், செல்வி ஏ.சிவலிங்கம், செல்வி எஸ்.சாம்பசிவம், செல்வி கே.சடாச்சரம், ரி.ஒசான், என்.வரதரூபி, எஸ்.தர்மிலா, பி.சத்தியகுமாரி, ஏ.ஜேசுதாஸ்,பி.தர்மீசன், எஸ்.கிருஷாந்தன்

இந்தக் கற்கைநெறிக்கு தெரிவான மாணவர்கள் எதிர்வரும் 3 ஆம் திகதிக்கு முன்னர் யாழ்.பல்கலைக்கழக பரீட்சைகளும், அனுமதிகளும் கிளையில் பதிவுசெய்யுமாறு பதிவாளர் தெரிவித்துள்ளார்.

(லெ)

# இசைத்துறைத் தலைவராக பாக்கியலட்சுமி நியமனம்

(சுதுமலை)

இராமநாதன் நுண்கலைக் கழகத்தின் இசைத்துறைக்கு புதிய தலைவராக, சிரேஷ்ட விரிவுரையாளராக கடமையாற்றிய செல்வி.பாக்கியலட்சுமி -- நடராசாவை யாழ்.பல்கலைக்கழக நிர்வாகம் நியமித்துள்ளது.

இசைத்துறைத் தலைவராக இருந்த ந.சி.மு.நவரட்ணம் தொடர்ந்து இசைத்துறை விரிவுரையாளராக கடமையாற்றவுள்ளதாகவும், யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக்கழக இசைத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

(91)

# சமாந்தரமாக சென்ற 11 பேருக்கு யாழ்.நீதிமன்றம் அபராதம் விதிப்பு

யாழ்.நகரை அண்டிய வீதிகளில் நேற்று சமாந்தரமாகச் சைக்கிளில் சென்ற 11 பேருக்கு தலா ஆயிரம்ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

யாழ்.போக்குவரத்துப் பொலிஸாரின் திடீர் நடவடிக்கையால், நேற்று யாழ்.நகரை அண்டிய பகுதிகளின் முக்கியசந்திகளில் பொலிஸாரும், இராணுவப் பொலிஸாரும் குவிக்கப்பட்டு சமாந்தரமாக வீதிகளில் பயணிததோர் தடுத்துநிறுத்தப்பட்டனர்.

சந்திகளில் ஏராளமான இளைஞர், யுவதிகள் இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். இவர்களில் 11 பேர் மட்டும் நேற்று யாழ்.நீதிமன்றில், யாழ்.மாவட்ட மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி - நந்தசேகரன் முன்னிலையில் பொலிஸாரால் ஆஜர்படுத்தப்பட்டனர். இவர்களைத் தலா ஆயிரம்ரூபா தண்டப்பணம் செலுத்திவிட்டு, சைக்கிளைப் பெற்றுச்செல்லுமாறு நீதிவான் தெரிவித்தார்.

இவ்வாறு சமாந்தரமாக சைக்கிளில் பயணிப்போரால், வீதிப்போக்குவரத்திற்குப் பெரும இடையூறு ஏற்படுவதால் அவர்கள பொறுப்புடன் நடந்து கொள்ளவேண்டுமெனவும் எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுவோர், வீதிவிபத்துக்களைத் தடுக்கும் வகையில் நீதிமன்றில் நிறுததப்படுவார்கள் என யாழ்.பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

## பயிற்சியாளர்களுக்கு சான்றிதழ் வழங்கல்

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் கோப்பாய் பிரிவினரால் நடாத்தப்பட்ட பத்திரிகையாளர் பயிற்சி நெறியில் கலந்துகொண்டு பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் அடுத்தமாதம் 20 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

கோப்பாய் மகாவித்தியாலயத்தில் இந்த நிகழ்வு காலை 10 மணியளவில் இடம்பெறும் என சங்கத்தின் செயலாளர் தெரிவித்தார்.


## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

'தொம்சன் கோம் சினிமா' தொடர்புகளுக்கு டோறா வீடியோ நெல்லியடி. T.P.2263432 (சி/2598)

— — — — — — — — — — —

சன்ரீவி தொடர்நாடகங்களைக் கண்டுகளிக்க ஆசையா? சித்தி, மெட்டிஒலி, அண்ணாமலை, வேலன். ஆசையைப் பூர்த்திசெய்ய டோறா வீடியோ நெல்லியடி . T.P.2263432 (சி/2599)

### வரலாற்று ஆவணங்கள்

கலாநிதி க.குணராசா-- ஈழத்தவர் வரலாறு, The Jaffna Dynasty, மகாவம்சம் தரும் இலங்கைச் சரித்திரம், முத்துத்தம்பிப்பிள்ளையின் யாழ்ப்பாணச் சரித்திரம், ஜோனின் யாழ்ப்பாணச் சரித்திரம், மயில்வாகனப் புலவரின் யாழ்ப்பாண வைபவ மாலை, 24 மணிநேரம், மீண்டும் யாழ்ப்பாணம் எரிகிறது, யாழ்ப்பாணக் கோட்டை வரலாறு - பிரபல புத்தக சாலைகளில் விற்பனையாகின்றன. கமலம் பதிப்பகம் 75/10A, பிறவுண் வீதி, நீராவியடி யாழ்ப்பாணம். (சி-2583)

### நாவல்கள்

செங்கை ஆழியானின் புதிய நாவல்கள் - போரே நீ போ, வானும் கனல் சொரியும், சாம்பவி, ஈழராஜா எல்லாளன், கூடில்லா நத்தைகளும் ஓடில்லா ஆமைகளும் மற்றும்.. கிடுகு வேலி, யானை, குவேனி, காவோலை, ஆச்சி பயணம் போகிறாள்.. பிரபல புத்தகசாலைகளில் விற்பனையாகின்றன. கமலம் பதிப்பகம், 75/10A, பிறவுண் வீதி, நீராவியடி யாழ்ப்பாணம். (சி-2582)

நிறைஞ்சனாஸ் சங்கானை
பிரபுதேவா, ஆஸிமா, ரகுவரன் நடித்த
அலாவுதீன்
காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00.(பு.நே.)
வெள்ளி,சனி,ஞாயிறு இரவு8.45 (பு.நே)
AMERICAN PIE
(சி-2386)

ராஜா யாழ்ப்பாணம்.
இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே தின வெளியீடு
சூர்யா, சித்தார்த், மாதவன், மீரா ஜாஸ்மின், திரிஷா நடித்த
ஆய்த எழுத்து

(சி-2387)
காட்சிநேரம்:-10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

நாகம்ஸ் சுன்னாகம்
மாதவன், சதா, விவேக் நடித்த

எதிரி

(றீல்ஸ்)
(சி-2397)
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)


## நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் மீளிணக்கத்திற்கான அமைச்சு
## வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள பாலங்களை புனரமைத்தல்

# கேள்வி அறிவித்தல்

ஐக்கிய இராஜ்சியத்திலிருந்து கொண்டு வரப்பட்ட கொம்பக்ட் உருக்கு பாலமமைத்தல் உதிரிப்பாகங்களை (Compact steel Bridgeing Componanls) கொண்டு வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள பாலங்களை புனரமைப்பதற்கான கடனொன்றை இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசானது பெற்றுள்ளது.

பின்வரும் பாலங்களுக்காக உப கட்டமைப்புக்களை நிர்மானிப்பதற்கான பொறியிடப்பட்ட கேள்வி(களை) 2004.06.21ம் திகதி பி.ப. 3.00 மணி வரை வடக்கு - கிழக்கு பாலங்கள் புனரமைத்தல் திட்டத்திற்கான கேள்விச் சபை தலைவர் பெற்றுக்கொள்வார்.

யாழ்ப்பாண மாவட்டம்:

| தொடர் இல | பாலம் மற்றும் வீதியின் பெயர் | அடையாள இல | வீதி இல | மீளளிக்கப்படாத தொகை (Rs) | கேள்விப் பிணைக்கான தொகை (Rs) | ICTAD தரம் |
|---|---|---|---|---|---|---|
| P/01 | நாவற்குழி கண்டி வீதி யாழ்ப்பாணம் (314/1) | 1.01.01 | A9 | 1000/- | 500,000/- | M4 |
| | கைதடி- கண்டி வீதி - யாழ்ப்பாணம் (309/1) | 1.01.02 | A9 | | | |
| P/02 | வண்ணாத்தி (Butterfly) புத்தூர் மீசாலை வீதி (6/1) | 1.01.06 | AB32 | 1500/- | 260, 000/- | M4 |
| | வல்லை - யாழ்ப்பாணம் பருத்துத்துறை வீதி (21/2) | 1.01.07 | AB20 | | | |
| | புலோலி - சாவகச்சேரி புலோலி வீதி (14/1) | 1.01.22 | B75 | | | |

கிளிநொச்சி மாவட்டம்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| P/03 | யாழ்ப்பாணம் கண்டி வீதி (263/1) | 1.02.40 | A9 | 1000/- | 120,000/- | M5 |
| | யாழ்ப்பாணம் கண்டி வீதி (263/2) | 1.02.41 | A9 | | | |
| P/04 | பரந்தன் முல்லைத்தீவு வீதி (8/4) | 1.02.30 | A35 | 2000/- | 380,000/- | M4 |
| | பரந்தன் முல்லைத்தீவு வீதி (9/1) | 1.02.31 | A35 | | | |
| | பரந்தன் முல்லைத்தீவு வீதி (10/2) | 1.02.32 | A35 | | | |
| | பரந்தன் முல்லைத்தீவு வீதி (11/1) | 1.02.33 | A35 | | | |

மன்னார் மாவட்டம்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| P/05 | வெள்ளன்குளம் தள்ளாடி வீதி | 1.04.11 | A32 | 1000/- | 160,000/- | M5 |
| | வெள்ளன்குளம் தள்ளாடி வீதி | 1.04.13 | A32 | | | |
| P/06 | வெள்ளன்குளம் தள்ளாடி வீதி | 1.04.19 | A32 | 1000/- | 120,000/- | M5 |
| | வெள்ளன்குளம் தள்ளாடி வீதி | 1.04.20 | A32 | | | |

கேள்வி ஆவணங்கள் 2004 ஜுன் 14ம் திகதி வரை சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9.30 - பி.ப. 4.00 வரையில் கொழும்பு-03, காலி வீதி, 177, 3ம் மாடியிலுள்ள திட்ட அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

விரும்பின் கேள்வி ஆவணங்களை பெறுவதற்கு முன்பு இலவசமாக இதே அலுவலகத்தில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம். வெவ்வேறு மாவட்டங்களிலுள்ள பாலங்களுக்கு விஜயம் செய்யும் திகதிகளை கேள்விதாரருக்கு பின்னர் அறிவிக்கப்படும்.

கேள்விகள் திறக்கப்பட்ட பின் அக்கேள்விகள் 90 நாட்களுக்கே செல்லுபடியாகும். அத்துடன், அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தாகை கேள்விப்பிணையுடன் சேர்க்கப்பட்டு

செயலாளர்.

நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் மீளிணக்கத்திற்கான அமைச்சு

இன் பேரில் வரையப்படல் வேண்டும். மேலும் அவை கேள்விகள் திறக்கப்படும் திகதியிலிருந்து 120 நாட்களுக்கு செல்லுபடியாகும். கேள்விப்பிணைகளானது அங்கீகரிக்கப்பட்ட வங்கி அல்லது நிர்மாண உத்தரவாத நிதியிலிருந்து மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும்.

அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரங்கள் மற்றும் செல்லுபடியாகும் NCASL அங்கத்துவத்தையுடைய கேள்விதாரர்கள் வியாபாரக்கடிதத் தலைப்பில் ஆவனங்களைக் கோரும் கடிதத்தினை சமர்ப்பிப்பதன் மூலம் மாத்திரமே கேள்வி ஆவணங்கள் விநியோகிக்கப்படும்.

கேள்விதாரர்கள் பாலங்கள் நிர்மாணிப்பது தொடர்பாக தேவைப்படும் நிதி மற்றும் தொழில்நுட்ப தகைமை, ஆவண்ச்சான்றிதழ் கொண்டிருப்பதை கேள்வியில் குறிப்பிடப்பட்ட அறிவுறுத்தல்களிலுள்ள நிபந்தனைகளுக்கமைய உறுதி செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

நகல்களுடன் மற்றும் தபாலுறையில் இடது பக்க மேல் மூலையில் திட்டத்தலைப்பினை குறிப்பிடப்பட்ட பொறியிடப்பட்ட கேள்வி(கள்)

தலைவர்,
கேள்விச் சபை,
வடக்கு - கிழக்கு பாலங்கள் புனர் நிர்மாணத்திற்கான திட்டம்.
3ம் மாடி, 177, காலி வீதி, கொழும்பு 03.

என்னும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமோ கிடைக்கச் செய்யலாம்.

கேள்விகள் திறக்கப்படும் போது கேள்வித்தாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் சமூகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவர். கேள்விகள் திட்டப்பணிப்பாளர் அலுவலகத்தில் கேள்விகள் மூடப்பட்டு உடனடியாக திறக்கப்படும்.

தலைவர்,
திட்டக் கேள்விச் சபை,
வடக்கு - கிழக்கு பாலங்கள் புனர்நிர்மாண திட்டம்,
புனர் வாழ்வு, நிவாரணம் மற்றும் மீளிணக்கத்திற்கான அமைச்சு,
3ம் மாடி, 177, காலி வீதி, கொழும்பு-03.

(சி/2594)

# இறைமைக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் அரசாங்கம் - புலிகளுடன் பேச்சு நடத்தும்

## பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

**சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பாகச் சரியான நடவடிக்கைகளை ஜனாதிபதி முன்னெடுத்து வருகின்றார் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**



நாட்டின் இறைமைக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் நோர்வேயின் ஏற்பாட்டுடன் அரசாங்கம் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கும் என்றும் பிரதமர் நம்பிக்கை தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தென்மாகாண பிரதேச அமைப்பாளர்களுடன் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கருத்து வெளியிடுகையில் -

மக்களின் வாழ்க்கைச் செலவு அதிகரித்துச் செல்கின்றது. அதனைக் கட்டுப்படுத்தவேண்டும். அதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது.

கடந்த அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்திருந்தது. அதனை எமது அரசாங்கம் நிவர்த்தி செய்து வருகின்றது.

துரிதமான அபிவிருத்தியை மேற கொள்ளவேண்டுமானால், புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தையை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும்.

ஜனாதிபதி அதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார். நோர்வேயின் ஏற்பாட்டுடன் சமாதானப் பேச்சுவார்த்தையை முன்னெடுப்பதற்கான நடவடிக்கையை முதலில் ஆரம்பித்தவர் ஜனாதிபதிதான். அதன் பின்னர்தான் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் அதனைத் தொடர்ந்து முன்னெடுத்தது.

தற்போது மீண்டும் ஜனாதிபதி அதனைப் பொறுப்பேற்றிருக்கிறார். ஆகவே மக்கள் அச்சமடையத் தேவையில்லை என்று பிரதமர் கூறியுள்ளார்.

# உணவு விவசாய நிறுவன செரெஸ் விருது இம்முறை ஜனாதிபதி சந்திரிகாவுக்கு

(கொழும்பு)



உலக உணவு விவசாய நிறுவனத்தால் வழங்கப்படும் 'செரெஸ்' விருது இம்முறை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு கிடைத்துள்ளது.

1971 ஆம் ஆண்டு முதல் உலக உணவு விவசாய நிறுவனத்தால் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வரும் இந்த விருதை - சமாதான முன்னெடுப்பு கிராமிய அபிவிருத்தி, உலக உணவு மற்றும் விவசாய நிறுவனத்துடனான நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கின்றமை போன்றவற்றிற்காகவே இம்முறை ஜனாதிபதிக்கு இந்த விருது வழங்கப்படவுள்ளது.

இந்த விருதை அன்னை தெரேசா, இந்திரா காந்தி, ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா போன்றோர் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். இந்த விருது இன்று கொழும்பில் வைத்து உலக உணவு விவசாய மையத்தின் பிரதிநிதிகளால் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

# சமாதானப் பேச்சுகளை ஆரம்பித்தாலேயே இலங்கைக்கான நிதி உதவி வழங்கப்படும்!

## ஐரோப்பிய ஆணைக்குழு தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் தடைப்பட்டுப் போயுள்ள விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டாலேயே ஐரோப்பிய ஆணைககுழுவின் இலங்கைக்கான உதவிகள் வழங்கப்படுமென அந்தக் குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக குழுவின் பேச்சாளர் எம்மா உட்வின் தெரிவிக்கையில் - ஐரோப்பிய ஆணைக்குழு 25 மில்லியன் யூரோவை இலங்கைக்கு வழங்கத் தயாராக உள்ளது. ஆனால், அதற்கு சமாதானப் பேச்சுவார்த்தை மீள ஆரம்பிக்கப்பட வேண்டும்.

இரு பகுதியினரும் இணைந்து சமாதானப் பேச்சுக்களை முன்னெடுபபதை ஐரோப்பிய ஆணையகம் மிகவும் ஆவலுடன் எதிர்பார்ப்பதாகவும், பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்ட பின்னரே ஒதுக்கப்பட்ட நிதி இலங்கைக்கு வழங்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, வரும் திங்கட்கிழமை சர்வதேச நாடுகள் இலங்கைக்கு உதவி வழங்குவது குறிதது பிரஷ் லெஸ்ஸில் கூடி ஆராயவுள்ளதாகவும், இதன்போது சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பது தொடர்பாகவும் கலந்துரையாடப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

# பாசிக்குடா கடற்கரைக்கு வரும் உல்லாசப் பயணிகள் தொகை வீழ்ச்சி

(கொழும்பு)

மட்டக்களப்பில் இடம்பெற்று வரும் தொடர்ச்சியான வன்முறைகள் காரணமாக, பாசிக்குடா கடற்கரைக்கு வரும் உல்லாசப் பயணிகளின் தொகை பெரும் வீழ்ச்சி கண்டுள்ளது.

அரசுக்கும் - தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான போர் நிறுத்த ஒப்பந்தத்தை அடுத்து, பெருந்தொகையான உல்லாசப் பயணிகள் வருகை தரும் இடமாக பாசிக்குடா கடற்கரை விளங்கியிருந்தது.

ஆனால், மட்டக்களப்பில் கருணா விவகாரத்தின் பின்னர் தோன்றியுள்ள அமைதியின்மை மற்றும் பயமுறுத்தல்கள் காரணமாக இந்நிலை தற்போது மாற்றமடைந்திருப்பதாகத் தெரியவருகிறது.

கடந்த வருடத்தோடு ஒப்பிடுகையில், உல்லாசப் பயணிகளின் வருகை 50 வீதத்தால் வீழ்ச்சி கண்டிருப்பதாக பாசிக்குடா கடற்கரைகளில் உள்ள உல்லாச விடுதிகளின் உரிமையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பில், வாழைச்சேனைக்கு அருகாக அமைந்துள்ள பாசிக்குடா எனப்படும் இக்கடற்கரை- இலங்கையில் உள்ள கடற்கரைகளிலேயே மிகவும் அழகு வாய்ந்த ஒன்றாக விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

## தடுப்புக் காவலிலுள்ள கைதிகள் மீதான

# மனித உரிமை மீறல்களை கட்டுப்படுத்த விசேட நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளது

தடுப்புக் காவலில் உள்ள கைதிகள் மீதான பொலிஸாரின் மனித உரிமை மீறல் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்கு, விசேட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக சட்டமா அதிபர் ரி.கமல சபேசன் தெரிவித்தார்.

கைதிகளின் மனித உரிமைகளை மீறும் பொலிஸார்மீது உடனடி விசாரணைகளையும், அவர்களுக்கெதிரான வழக்குத் தாக்கல்களையும் உடனடியாக மேற்கொள்ளும் வகையில் புதிய நடைமுறைகள் அமுல்படுத்தப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தடுப்புக் காவலிலுள்ள கைதிகள்மீது மேற்கொள்ளப்படும் வன்முறைகளைக் குறைப்பது தொடர்பாக, இலங்கைத் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுடன் அண்மையில் இடம்பெற்ற சந்திப்பின்போது, தான் கலந்துரையாடியதாகவும் -

இதன்போது சகல பொலிஸ் பணிமனைகளிலும் விசேட தொலைபேசி இலக்கங்களை வழங்குவதற்கும், அங்கு சிறப்பு சுயாதீன குழுவொன்றினை செயற்படவைப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டதுடன்,

கைதிகள் மீதான விசாரணைகளை 24 மணித்தியாலயத்துக்குள் மேற்கொள்வது தொடர்பாகவும் முக்கிய இணக்கப்பாடுகள் காணப்பட்டதாக சட்டமா அதிபர் ரி.கமல சபேசன் மேலும் தெரிவித்தார்.(01)

# கூரைத்தகடுகளை விநியோகிக்குமாறு சம்மாந்துறை பிரதேச செயலருக்கு உத்தரவு

(கொழும்பு)

மட்டக்களப்பு சம்மாந்துறைப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள வறிய மக்களுக்கு வழங்கவென கையளிக்கப்பட்ட கூரைத்தகடுகளை உடன் உரிய மக்களிடம் வழங்குமாறு வீடமைப்பு அமைச்சு உத்தரவிட்டுள்ளது.

கடந்த அரசாங்கத்தின் காலத்திலேயே இவ்வாறு 10 ஆயிரத்து 200 கூரைத்தகடுகள் சம்மாந்துறைப் பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்தது.

எனினும், அவை இதுவரை விநியோகிக்கப்படாமல் இருப்பதையும், அவை பாதுகாப்பற்ற முறையில் களஞ்சியப்படுத்தப்பட்டிருப்பதையும் வீடமைப்பு அமைச்சுக்கு பொது மக்கள் சுட்டிக்காட்டியதனை அடுத்தே, அவற்றை விநியோகிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இறக்காமம், நாவிதன்வெளிப் பகுதிகளைச் சேர்ந்த வறிய குடும்பங்களுக்கே இந்தக் கூரைத்தகடுகளை வழங்குமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

இவ்வாறான கூரைத்தகடுகளை கடந்த அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் பல அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் தமது சொந்தப் பயன்பாட்டிற்கு சேகரித்து வைத்திருந்த பின் அவை பறிமுதல் செய்யப்பட்டிருந்தமை தெரிந்ததே. (01)

# ஆயிரம் பௌத்த விகாரைகள் மூலம் ஹெல உறுமய கட்டியெழுப்பப்படும்

(கொழும்பு)

நாட்டிலுள்ள ஆயிரம் பௌத்த விகாரைகளின் ஊடாக ஜாதிக ஹெல உறுமயவை கட்டியெழுப்பப் போவதாக ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளர் உடுவே த்ம்மலோக தேரர் தெரிவித்தார்.

நாட்டில் உள்ள ஆயிரம் விகாரைகளின் ஊடாக குழுக்களை உருவாக்கி, அதன் மூலம் கிராமப் புறங்களிலும் ஜாதிக ஹெல உறுமயவின் பலத்தை அதிகரிக்கப் போவதாகவும் அவர் தெரிவித்தார்.

மஹரகமவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஜாதிக ஹெல உறுமயவின் கட்சிக் கூட்டமொன்றில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையில் மீண்டும் தர்ம இராச்சியத்தை உருவாக்குவதென்ற குறிக்கோளை நிறைவேற்றுவதற்காகவே பிக்குகளாகிய தாம் அரசியலில் இறங்கியுள்ளதாகவும், தமது இந்தக் குறிக்கோள் நிறைவு பெற்றதும் பலமிக்க இளைஞர்களின் கைகளில் ஜாதிக ஹெல உறுமய கையளிக்கப்படுமெனவும் அக்கட்சியின் பொதுச் செயலாளர் தம்மலோக தேரர் மேலும் தெரிவித்தார்.

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியசாலையின் பரிசளிப்புவிழா எதிர்வரும் 2 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி அதிபர் செ.சிவ நடராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

(101)

# உதவி வழங்கும் மாநாட்டில் ஆர்மிரேஜும் பங்குபற்றுவார்

எதிர்வரும் ஜூன் மாதம் பெல்ஜியம் பிரஷ்லெலஸ் நகரில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் மாநாட்டில் அமெரிக்க பிரதி இராஜாங்கச் செயலர் றிச்சட் ஆர்மிரேஜ் கலந்துகொள்வார்.

இவ்வாறு இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜெவ்றி லங்ஸ்ரீட் நேற்றுமுன்தினம் கொழும்பில் நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார். கண்ணிவெடி நிகழ்ச்சித் திட்டத்துக்கு நிதி வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்றது.

பத்திரிகையாளர் மாநாட்டில் தூதுவர் மேலும் தெரிவித்ததாவது -

இந்த உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் தெற்காசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான உதவிச் செயலாளர் கிறிஸ்ரினா றொக்காவும் கலந்துகொள்ளவுள்ளார்.

அத்துடன், இலங்கையில் புனர்வாழ்வு மற்றும் மீள்குடியமர்வை மேற்கொள்ள வேண்டுமெனில், அது தடைபட்டுப்போயுள்ள சமாதானப் பேச்சுவார்த்தையை மீள ஆரம்பித்தல் வேண்டும்.

சமாதானப் பேச்சுக்கள் தொடர்ந்தாலேயே கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகளும் இங்கு நடைபெறும் எனத் தெரிவித்தார்.

இந்த பத்திரிகையாளர் மாநாட்டில் றொன்கோ கண்ணிவெடி அகற்றும் பிரிவின் பிரதிநிதி பெரடிக் பல்சன் தெரிவிக்கையில் - கடந்த மாதம் வரை ஆயிரம் கண்ணிவெடிகளைத் தாம் அழித்துள்ளதாகக் குறிப்பிட்டார்.

அத்துடன் இதுவரை கடந்த ஓகஸ்ட் மாதத்திலிருந்து இன்றுவரை 40 இராணுவ பிரதிநிதிகளும், 42 சிரேஷ்ட அலுவலர்களும், 45 மருத்துவ பிரதிநிதிகளும் கடமையாற்றியுள்ளதாகவும், இதுவரை எட்டு இலட்சம் சதுரமீற்றரில் கண்ணிவெடி அகற்றப்பட்டதாகவும் தெரிவித்தார்.



நேற்று யாழ்.குடாநாட்டுக்கு விஜயம் செய்த ஆசிய அபிவிருத்தி வங்கிக் குழுவினரை யாழ். செயலகத்தில் வைத்து மங்கள விளக்கேற்றி வைப்பதைப் படத்தில் காணலாம்.

படம் : தீபன்

# சிம்பாப்வேயுடனான முதல் ஒருநாள் போட்டி
# அவுஸ்ரேலிய அணி சிறப்பாக ஆடவில்லை

## ஒப்புக்கொள்கிறார் ரிக்கிபொண்டிங்



ஹராரேயில் நடைபெற்ற சிம்பாப்வே அணிக்கு எதிரான முதலாவது ஒருநாள் போட்டியில் அவுஸ்ரேலிய அணி சிறப்பாக ஆடவில்லையென்று அந்த அணியின் கப்டன் ரிக்கிபொண்டிங் ஒப்புக்கொண்டிருக்கிறார்.

"ஹராரேயில் நடைபெற்ற முதலாவது ஒருநாள் போட்டியில் முதலில் ஆடிய சிம்பாப்வே அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 9 விக்கெட் இழப்பிற்கு 205 ஓட்டங்களை எடுத்தது. இதில் ஆரம்ப ஆட்டக்காரராக இறங்கிய ரெய்லரும், கப்டன் தைபுவும் அரைச் சதம் அடித்து அணிக்கு வலுச் சேர்த்தனர்.

வலிமை குறைந்த சிம்பாப்வே அணி 50 ஓவர்களையும் முழுமையாக ஆடியது எதிர்பார்த்த ஒன்றுதான். எங்கள் அணியின் பந்துவீச்சும் களத்தடுப்பும் எதிர்பார்த்த அளவு அமையவில்லை. அனுபவம் அதிகமில்லாத புதுமுக வீரர்களைக் கொண்ட சிம்பாப்வே அணி எங்கள் வீரர்களின் பந்துவீச்சை எதிர்கொண்டு தாக்குப் பிடித்து 50 ஓவர்களையும் ஆடியது வியப்பையே அளித்தது" என்று ரிக்கி பொண்டிங் கருத்துத் தெரிவித்தார்.

அவுஸ்ரேலிய அணியின் துடுப்பாட்டம் குறித்து திருப்தி தெரிவித்த ரிக்கிபொண்டிங், சதத்தைத் தாம் தவறவிட்டது குறித்துக் கூறுகையில்,

"91 ஓட்டங்களில் நான் ஆடிக்கொண்டிருந்தபோது நெருக்கடியான நிலை ஏற்பட்டுவிட்டது. என்னுடைய சதத்திற்கும் வெற்றிக்கும் 9 ஓட்டங்களே தேவைப்பட்டன. எனவேதான், நான் பன்யங்காரா வீசிய பந்தில் சிக்ஸர் அடிக்க முயன்றேன். ஆனால், சிம்பாப்வே அணி வீரர் சிபாண்டா எல்லைக் கோட்டிற்கருகே வந்த பந்தை அற்புதமாகப் பிடித்துவிட்டார். அது மிகவும் சிறந்த பிடி என்பதால், அதில் எனக்கு எந்தவித வருத்தமும் இல்லை" என்று தெரிவித்தார்.

230 ஓட்டங்களே எடுக்க வேண்டும் என்று நாங்கள் முயற்சித்தோம் என தைபு அளித்த பேட்டியில் கூறியிருக்கிறார். முழுத் திறமையையும் வெளிப்படுத்தி ஆடுமாறு நான் எங்கள் அணியின் வீரர்களிடம் கேட்டுக்கொண்டேன். ரெய்லர் சிறப்பான ஆரம்பத்தைக் கொடுத்தார். அதற்குப் பிறகு வந்த வீரர்களும் ஓரளவு கைகொடுக்க எங்கள் அணியின் ஓட்ட எண்ணிக்கை 200 ஐத் தாண்டிவிட்டது.

இருப்பினும் எங்கள் அணியின் பந்து வீச்சு சராசரிக்கும் குறைவானதாகவே இருந்தது. பந்து வீச்சைப் பலப்படுத்துவது குறித்து நாங்கள் ஆலோசித்து வருகின்றோம். எங்கள் பந்துவீச்சாளர்கள் கடுமையான பயிற்சிகளை மேற்கொண்டு வருகிறார்கள். இனி வரும் போட்டிகளில் நாங்கள் பந்து வீச்சில் அதிக கவனம் செலுத்துவோம்" என்று தைபு செய்தியாளர்களிடம் கூறினார்.

## வி.கே.ஆறுமுகம் ஞாபகார்த்த
## உதைபந்தாட்டப் போட்டியில் மணற்காடு சென். அன்ரனீஸ் சம்பியன்

(யாழ்ப்பாணம்)

வி.கே. ஆறுமுகம் ஞாபகார்த்தமாக பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கினால் நடாத்தப்பட்ட உதைபந்தாட்ட இறுதியாட்டம் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இந்த விழாவிற்கு பிரதம விருந்தினராக, இலங்கை உதைபந்தாட்ட சங்கத்தின் அங்கத்தவர் த.ரட்ணசிங்கமும் சிறப்பு விருந்தினராக நிதர்ஸன உறுப்பினர் ராஜனும் கலந்துகொண்டனர்.

இறுதியாட்டத்தில் 'ஏ' பிரிவில் மணற்காடு சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சிவானந்தா விளையாட்டுக் கழகம் மோதியது.

முதலாவது கோலை சிவானந்தா அணியினர் தம் பக்கமே அடித்து சென். அன்ரனிஸ விளையாட்டுக் கழகத்திற்குக் கொடுத்தனர்.

இதனையடுத்து இடைவேளைக்கு முன்னதாக மணற்காடு சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழக வீரன் கீயூட்டனினால் 2 கோல்கள் அடிக்கப்பட்டன. இடைவேளையின் பின்னர் அதே அணி வீரர் இருதயராசாவினால் 02 கோல்கள் அடிக்கப்பட்டு 5:0 என்ற கோல் கணக்கில் சிவானந்த அணியினரைத் தோற்கடித்து, மணற்காடு சென். அன்ரனீஸ் சம்பியன் கிண்ணத்தைப் பெற்றுக்கொண்டது.

இதில் சிறந்த ஆட்ட நாயகனாக மணற்காடு சென். அன்ரனீஸ் வீரன் இருதயராசா தெரிவுசெய்யப்பட்டார். என பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் செயலாளர் தி.வரதராஜன் தெரிவித்தார். (12)

# முத்தரப்பு கிரிக்கெட் போட்டி
# ஒக்டோபரில் நடைபெறவுள்ளது

## பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அறிவிப்பு

எதிர்வரும் ஒக்டோபரில் பாகிஸ்தானில் இலங்கை மற்றும் சிம்பாப்வே அணிகளுக்கு இடையே முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடரை நடத்தப் போவதாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

சிம்பாப்வே கிரிக்கெட் அணி வரும் ஒக்டோபர் மாதம் பாகிஸ்தானில் பயணம் மேற்கொண்டு இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரிலும், ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரிலும் ஆடுவதாக முதலில் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், சிம்பாப்வே கிரிக்கெட் சபைக்கும் அந்த அணியின் வீரர்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதலால் சிம்பாப்வே அணியில் ஆடிக்கொண்டிருந்த கப்டன் ஹீத் ஸ்ரீக் உட்பட எட்டு முக்கியமான முன்னணி வீரர்கள் அணியில் இருந்து நீக்கப்பட்டனர். எனவே, அந்த அணியின் விக்கெட் காப்பாளர் தைபு தலைமையில் புதிய அனுபவம் அற்ற இளம் வீரர்களைக் கொண்ட அணி உருவாக்கப்பட்டது.

அந்த அணி இலங்கை அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் மோசமாக ஆடியதால், சிம்பாப்வே அணியின் டெஸ்ட் அந்தஸ்து இப்போது கேள்விக்குறியாகிவிட்டது.

இந்த நிலையில் தைபு தலைமையிலான அணி பாகிஸ்தானில் ஆடினால், அதற்குச் சரியான வரவேற்பு இருக்காது என்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபை கருதுகிறது. அந்த அணியுடனான போட்டிகளை ஒளிபரப்புவதற்கு எவரும் ஆர்வமாக முன்வரமாட்டார்கள் என்பதால், ஒருநாள் தொடரில் இலங்கை அணியையும் சேர்த்துக்கொண்டு முத்தரப்பு ஒருநாள் தொடராக மாற்றிவிடலாம் என, பாகிஸ்தான் கிரிக்கெட் சபை ஆலோசித்து வருகிறது.

பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைமை நிர்வாகி ரமீஸ்ராஜா இது குறித்து நேற்றுமுன்தினம் இஸ்லாமாபாத்தில் செய்தியாளர்களைச் சந்தித்து பேட்டி கொடுத்தார். அப்போது அவர் கூறுகையில் -

ஒக்டோபரில் மற்ற அணிகள் எல்லாமே ஓய்வின்றி இருக்கின்றன, இலங்கை அணி மட்டும் தான் எந்தத் தொடரிலும் அந்த மாதத்தில் ஆடவில்லை. அத்துடன் இலங்கை அணி 2005 ஆம் ஆண்டு மார்ச்சில்தான் பாகிஸ்தான் வருகிறது. இந்தக் கால இடைவெளியை சரிக்கட்டும் விதமாக அந்த அணியை அழைப்பதுதான் சரியாக இருக்கும் என்று நாங்கள் கருதுகிறோம். இது குறித்து இலங்கை கிரிக்கெட் சபையை அணுகியிருக்கிறோம். நல்ல பதில் கிடைக்கும் என்று நாங்கள் நம்பிக்கை வைத்திருக்கிறோம் என்று தெரிவித்தார்.




## இன்று நடைபெறவுள்ள உதைபந்தாட்டப் போட்டி

'தூய ஒளி' சுற்றுக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் இன்று மோதவிருக்கும் விளையாட்டுக்கழகங்களின் விபரம் வருமாறு-

பிற்பகல் 3 மணியளவில் இளவாலை யங்ஹென்றீஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து, கொய்யாத் தோட்டம் ஐக்கிய விளையாட்டுக் கழகமும்,

4 மணியளவில் மாதகல் சென். தோமஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வல்வை விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

முன்னர் அறிவித்தது போலல்லாமல் தவிர்க்க முடியாத காரணங்களால் மேற்படி ஆட்டங்கள் சில தினங்களுக்கு யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறுகின்றன.

குருநகர் பாடுமீன் விளையாட்டுக்கழக மைதானத் திருத்த வேலை முடிந்ததும் தொடர்ந்து அங்கு விளையாட்டுப் போட்டிகள் நடைபெறுமெனத் தெரிவிக்கப்படுகின்றது. (206)

# முதுகில் ஏற்பட்ட காயத்தினால் நாடு திரும்புகிறார் வில்லியம்ஸ்



அவுஸ்ரேலிய அணியின் வேகப் பந்து வீச்சாளர் பிரட் வில்லியம்ஸ் முதுகில் ஏற்பட்ட காயம் காரணமாக சிம்பாப்வேயிலிருந்து உடனடியாக அவுஸ்ரேலியாவிற்குத் திரும்புகிறார்.

ஹராரேயில் நடைபெற்ற சிம்பாப்வே அணிக்கு எதிரான முதலாவது ஒருநாள் போட்டியின்போது, ஐந்து ஓவர்களை முழுமையாக வீசுவதற்குமுன் வில்லியம்ஸ் மிகவும் கஷ்ரப்பட்டார். அவர் வீசிய முதலாவது ஓவரில் முதல் நான்கு பந்துகளை மட்டும் அவரால் ஒழுங்காக வீசமுடிந்தது. ஐந்தாவது பந்தை அவர் வீசும்போது, அவருக்கு ஏற்பட்ட லேசான முதுகுவலி பின் அடுத்தடுத்த ஓவர்களில் தீவிரமடைந்தது. அதனால், ஐந்து ஓவர்களில் 31 ஓட்டங்கள் கொடுக்க அவர் அதற்குப் பிறகு பந்துவீசவில்லை.

முதுகில் யாரோ ஊசியால் குத்தியது போல் வலி ஏற்பட்டது. அதனால், மூச்சுவிடவும் மிகவும் சிரமமாக இருந்தது. நேரம் ஆகஆக வலி அதிகரித்துக் கொண்டே இருந்தது. பல்லைக் கடித்துக் கொண்டுதான் நான் ஐந்தாவது ஓவரைப் பூர்த்தி செய்தேன். அதனால் சிகிச்சைக்காக நான் உடனடியாக அவுஸ்ரேலியா திரும்புகிறேன்.

மிக ஆவலோடு சிம்பாப்வே அணிக்கு எதிரான டெஸ்ட் மற்றும் ஒருநாள் தொடர்களில் பந்துவீச வந்தேன். டெஸ்ட் தொடர் ரத்தானது ஒருவகையில் ஏமாற்றம் என்றால் ஒருநாள் தொடரிலும் என்னால் பந்துவீச முடியாமற் போனது மற்றொரு வகையில் எனக்கு ஏமாற்றம்தான்.

இருப்பினும் அவுஸ்ரேலியா திரும்பி ஸ்கான் முதலான பரிசோதனைகள் செய்து கொள்ளப் போகிறேன். வரும் ஜூலை மாதம் இலங்கை அணி அவுஸ்ரேலியா வருகிறது. அதற்குள்ளாக முழுமையாகக் குணமடைந்துவிடவேண்டும் என்பது எனது விருப்பம். அதனால்தான், தாமதிக்காமல் உடனடியாக நாடு திரும்புகிறேன்.

சிம்பாப்வேயில் எங்கள் அணி இன்னும் இரண்டு ஒருநாள் போட்டிகளில் மட்டுமே ஆடப்போகிறது. அந்தக் குறுகிய காலத்திற்குள் இந்தக் காயத்தைச் சரிசெய்ய முடியாது. மேலும், அவுஸ்ரேலியாவில் உள்ளது போல் சிம்பாப்வேயில் அவ்வளவு மருத்துவ வசதிகள் கிடையாது. அதனால், நான் அவுஸ்ரேலியாவிற்குத் திரும்பவேண்டும் என்று எங்கள் அணியின் மேலாளர் கட்டளையிட்டுவிட்டார்" என்று வில்லியம்ஸ் ஹராரேயில் இருந்து புறப்படும் முன்னர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியின்போது கூறினார்.

## பந்துவீச்சு வரிசையில்
# இரண்டாம் இடத்திற்கு ஹார்மிசன் முன்னேற்றம்



நியூஸிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் சிறப்பாகப் பந்துவீசியதன் மூலம் கிரிக்கெட் தரவரிசையில் இங்கிலாந்து அணியின் ஸ்ரீவ் ஹார்மிசன் 2 ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

பிரைஸ் வாட்டர்ஹவுஸ் பந்து வீச்சு தரவரிசையில் ஹார்மிசன் 2 ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார். நியூஸிலாந்து அணிக்கு எதிராக லோர்ட்சில் நடைபெற்ற முதல் டெஸ்ட் போட்டியில் ஹார்மிசன் 8 விக்கெட்டுக்களை வீழ்த்தியது குறிப்பிடத்தக்கது.

இந்தப் போட்டியில் இங்கிலாந்து 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வென்றது.

இந்தப் போட்டியில் 8 விக்கெட்டுக்களை வீழ்த்தியதன் மூலம் 4 ஆவது இடத்திலிருந்த ஹார்மிசன் 2 ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார். இலங்கை அணியைச் சேர்ந்த சுழற்பந்து வீச்சாளரான முரளிதரன் 904 புள்ளிகளுடன் தொடர்ந்தும் முதலிடத்தில் இருந்துவருகிறார். 849 புள்ளிகளுடன் ஹார்மிசன் 2 ஆவது இடத்தில் உள்ளார். 837 புள்ளிகளுடன் பொலக் 3 ஆவது இடத்தைப் பிடித்துள்ளார்.

லோர்ட்சில் நடைபெற்ற முதல் டெஸ்டில் தோல்வியடைந்தாலும், நியூஸிலாந்து வீரர் கிறிஸ் மார்ட்டின் ஒரு இடம் முன்னேறி 10 ஆவது இடத்தைப் பிடித்துள்ளார்.

இந்த டெஸ்ட் போட்டியில் சிறப்பாகப் பந்துவீசாத நியூஸிலாந்து வீரர் ர.்.பி 10 ஆவது இடத்திலிருந்து 13 ஆவது இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளார்.

துடுப்பாட்டத்தில் நியூஸிலாந்து வீரர் மார்க் ரிச்சர்ட்சன், இங்கிலாந்து வீரர் நசார் ஹுசைன் இருவரும் தர வரிசையில் நல்ல முன்னேற்றம் பெற்றுள்ளனர்.

**பந்துவீச்சு**

1. முரளிதரன் (904 புள்ளிகள்), 2. ஹார்மிசன் (849 புள்ளிகள்), 3. பொலக் (837 புள்ளிகள்), 4. அக்தர் (826 புள்ளிகள்), 5. வோன் (777 புள்ளிகள்), 6. மெக்ரா (775 புள்ளிகள்), 7. கும்ளே (751 புள்ளிகள்), 8. ஜிலெஸ்பி (746 புள்ளிகள்), என்ரினி (722 புள்ளிகள்), மார்ட்டின் (658 புள்ளிகள்).

**துடுப்பாட்டம்**

1. லாரா (897 புள்ளிகள்), 2. ராவிட் (892 புள்ளிகள்), 3. ஹெய்டன் (881 புள்ளிகள்), 4. பொன்டிங் (864 புள்ளிகள்), 5. கலிஸ் (833 புள்ளிகள்), 6. கிப்ஸ் (815 புள்ளிகள்), 7. இன்ஸமாம் (785 புள்ளிகள்), 8. சச்சின் (784 புள்ளிகள்), 9.ஷேவாக் (782 புள்ளிகள்), 10. ரிச்சர்ட்சன் (761 புள்ளிகள்).

# புலிகள் மீதான தடையை நீடித்தமைக்கு யாழ்.மாவட்ட கூட்டுறவுச்சபை கண்டனம்!

(யாழ்ப்பாணம்)

சர்வதேச அரசாங்கங்கள் விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கி விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு அங்கீகாரம் வழங்குகின்ற வேளையில், சர்வதேச அரங்கில் விடுதலைப் புலிகள் பற்றிப் பேசப்படுகின்ற இந்தவேளையில், இந்திய அரசாங்கமானது, புலிகள் மீதான தடையை நீடிப்பதென அறிவித்திருப்பது மிகவும் வருந்தத்தக்கதும், வேதனைக்குரியதுமாகும். இந்த முடிவைமாற்றிஇதனை மறுபரிசீலனை செய்யுமாறு இந்திய அரசாங்கத்தை யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை கேட்டுக்கொண்டுள்ளது.

இது தொடர்பாக, யாழ். மாவட்டக் கூட்டுறவுச்சபையால் இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது-

தமிழ்மக்களின் ஏக பிரதிநிதிகளாய், ஈழத்தமிழ்மக்களின் சுதந்திரமான, தடைகளற்ற இயல்பு வாழ்க்கை நிலையைத் தமது இலட்சியமாகக் கொண்டு, கடந்த இரண்டு வருடங்களுக்குமேல் போர்நிறுத்தத்தைக் கடைப்பிடித்து சர்வதேசத்தையே ஒருகணம் திரும்பிப் பார்க்கவைத்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான தடை நீடிப்பை இந்திய அரசாங்கம் மேற்கொள்வதை நாம் எதிர்ப்பதோடு, விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான தடையை விரைவில் நீக்கிச் சர்வதேசத்தில் விடுதலைப் புலிகள் ஒரு அங்கீகரிக்கப்பட்ட இயக்கமாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதைத் தெளிவாக வலியுறுத்துகின்றோம்.

இந்திய அரசாங்கமானது - வெளியிட்ட அறிவித்தலில், விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஒரு பயங்கரவாத இயக்கமாகக் குறிப்பிட்டு வெளியிட்ட விபரங்கள் உண்மைக்குப் புறம்பான மாற்றுக் கருத்துக்களைக் கொண்டுள்ளன. இலங்கையின் சமாதான முயற்சிகள் சர்வதேசத்தின் அனுசரணையோடும், நோர்வேயின் மத்தியஸ்தத்துடனும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற இந்த வேளையில், எமது அயல்நாடான இந்தியா விடுதலைப் புலிகள் மீதான தடையை மேலும் இரண்டாண்டு காலம் நீடித்திருப்பது வேதனைக்குரியதும், விசனத்துக்குரியதுமான நிலையைத் தமிழ் மக்களிடையே தோற்றுவித்துள்ளது.

இலங்கையின் சமாதான நடவடிக்கைகளுக்கு இந்தியாவின் பங்களிப்பு அவசியமானது. இது ஈழத்தமிழர்களின் எதிர்பார்ப்பு. அதுமட்டுமல்லாமல் தமது பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வைப் பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பத்தில் இந்தியா தனது முற்றுமுழுதான பங்களிப்பையும், ஒத்துழைப்பையும் வழங்கும் என்ற எதிர்பார்ப்புடன் இருந்த எமது மக்களுக்கு இந்திய அரசின் இந்த அறிவித்தலானது தமிழ்மக்கள் மத்தியில் ஒரு குழப்பநிலையைத் தோற்றுவித்துள்ளது.

அண்மையில் நடந்து முடிந்த இலங்கையின் நாடாளும்மன்ற தேர்தலில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அமோகவெற்றியும், விடுதலைப் புலிகளே தமிழ்மக்களின் ஏகபிரதிநிதிகள் என்று சர்வதேச அரங்கிலே எடுத்து விளக்குகின்றது. தமிழகத்தைப் பொறுத்தவரையிலும், ஈழத் தமிழர் ஆதரவுக் கூட்டணியின் வெற்றியும், இலங்கையைப் பொறுத்தவரையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வெற்றியும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஒரு அங்கீகாரத்தை ஏற்படுத்திக்கொடுத்துள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தில் இந்திய அரசாங்கம் விடுதலைப் புலிகள் மீதான தடையை இரண்டு ஆண்டுகள் நீடித்தமையை வன்மையாகக் கண்டிக்கிறோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# சின்னஞ்சிறு செய்திகள்

## கவின்கலை மன்ற மாணவர்களுக்கு

யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலை வளாக அனைத்து வருட மாணவர்களுக்குமான அவசர கலந்துரையாடல் ஒன்று இன்று நண்பகல் 12 மணிக்கு நடைபெறவுள்ளது.

நுண்கலை வளாகத்தின் நடேசர் அரங்கில் நடைபெறும் இந்தக் கலந்துரையாடலுக்கு அனைவரையும் வருகை தருமாறு கவின்கலை மன்றத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## திருவிழிப்பு ஆராதனை

தும்பளை லூர்த்து அன்னை திருத்தலத்தில் நாளை இரவு 7 மணி முதல் மறுநாள் காலை 5 மணிவரை திருவிழிப்பு ஆராதனை இடம்பெறவுள்ளது.

மேற்படி ஆராதனை நிகழ்வுகள் பருத்தித்துறை பங்குத்தந்தை அருட்திரு ப.இருதயதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்தத் திருவிழிப்பு ஆராதனை நிகழ்வில், அனைவரையும் கலந்து கொள்ளுமாறு பங்குத்தந்தை வேண்டுகோள் விடுத்துள்ளார். (13)

## மஹா கும்பாபிஷேகம்

கைதடி வடக்கு கயிற்றசிட்டி சிவபூதவராயர் ஆலய மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 31 ஆம் திகதி பகல் 11.13 மணி முதல் 1.01 மணி வரையான சுப முகூர்த்தத்தில் நடைபெறவுள்ளது.

முதல் நாள் காலை 9 மணி முதல் பிற்பகல் 5 மணிவரை எண்ணெய்க்காப்புச் சாத்தும் நிகழ்வு இடம்பெறும். கும்பாபிஷேகக் கிரியைகள் யாவும் சிவஸ்ரீ க.மு.ஜயாத்துரைக்குருக்கள் தலைமையிலான சிவாச்சாரியார் குழுவினரால் நடத்தப்படும். (24)

## ஊழியர் சங்க பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி கண்ணாடித் தொழிற்சாலை ஊழியர் சங்கத்தின் மாதாந்தக் கூட்டம் நாளை மறுதினம் காலை 11 மணிக்கு நீர்வேலி கந்தசாமி கோவில் சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்திற்கு அனைத்து கண்ணாடித் தொழிற்சாலை ஊழியர்களையும் வருகைதந்து ஒத்துழைக்குமாறு சங்கத்தின் தலைவர் கேட்டுள்ளார்.

# சுவிஸ் நாட்டு நிறுவனத்தின் உதவியுடன் 8 பாடசாலைகள் புனரமைக்கப்படுகிறது

சுவிஸ் நாட்டு நிறுவனமொன்றின நிதி உதவியுடன் யாழ்.மாவட்டத்தில் போரினால் பாதிக்கப்பட்ட எட்டுப் பாடசாலைகள் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி மகளிர் கல்லூரி, மட்டுவில் வடக்கு கமலாசினி வித்தியாலயம், மட்டுவில் வடக்கு சந்திரா மௌலீ வித்தியாலயம், மீசாலை விக்கினேஸ்வரா வித்தியாலயம், நுணாவில் தெற்கு அ.த.க.பாடசாலை, பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி ஆகிய பாடசாலைகளே புனரமைக்கப்பட்டு வருகின்றன.

சுவிஸ் நாட்டு அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ரூ டொல்ப் பில்சார்சர், திட்டமிடல் அதிகாரி பீற்றர் ஸ்கெமிட் ஆகியோர் மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் சகிதம் அண்மையில் புனரமைக்கப்பட்டு வரும் பாடசாலைகளை நேரடியாகப் பார்வையிட்டனர். (122)

# பளைப் பகுதியில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரிப்பு!

(பச்சிலைப்பள்ளி)

பளைப் பிரதேசத்தில் கட்டாக்காலி நாய்களின் தொல்லைகள் அதிகரித்து வருவதனைத் தொடர்ந்து அவற்றைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை ஈடுபட்டுள்ளது.

கட்டாக்காலி நாய்களைப் பிடிப்பதற்கான 21 ஆயிரம் ரூபா பெறுமதியான வண்டிலொன்று அண்மையில் கொள்வனவு செய்யப்பட்டது.

கிராமங்கள் தோறும் பறைதட்டி மக்களை அழைத்து வளர்ப்பு நாய்கள் பதிவு செய்யப்பட்டு இலக்கத்தகடுகள் வழங்கப்பட்டு, அவைகள் நாய்களின் கழுத்துக்களில் தொங்க விடப்பட்டுள்ளது.

இலக்கத்தகடுகள் இல்லாத நாய்கள் கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டு வருகின்றன.

நேற்று முன்தினம் தம்பகாமத்தில் 19 நாய்களும், புலோப்பளையில் 16 நாய்களும் பிடித்து அழிக்கப்பட்டன. (122)

## பயிற்சியாளர்களுக்கு சான்றிதழ் வழங்கல்

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கோப்பாய் பிரிவினரால் நடத்தப்பட்ட பத்திரிகையாளர் பயிற்சி நெறியில் கலந்துகொண்டு பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் அடுத்த மாதம் 20 ஆம் திகதி நடை பெறவுள்ளது.

கோப்பாய் மகா வித்தியாலயத்தில் நடைபெறும் இந்த நிகழ்வு - காலை 10 மணி யளவில் இடம் பெறும் என சங்கத்தின் செயலாளர் தெரிவித்தார்.

# தபாலட்டையின் விலையைக் குறைக்குமாறு கோரிக்கை!

தபால் அட்டையின் விலையைக் குறைக்க ஆவனசெய்யுமாறு சலன சித்திரம் அமைப்பினர் தபால், தொலைத்தொடர்பு அமைச்சருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அந்த வேண்டுகோளில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

தபாலட்டையின் விலையை மூன்று ரூபாயிலிருந்து ஒரு ரூபாயாகக் குறைப்பதுடன் மட்டுமல்லாமல், இதற்கு மானியம் வழங்கி எக்காலத்திலும் இது விலை மாறிலியாக இருக்க உறுதிசெய்து உதவுமாறு தங்களைத் தாழ்மை புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இதே கோரிக்கையை, 2002 ஓகஸ்ட் 12 இல், அப்பொழுது பதவியிலிருந்த தபால் அமைச்சரிடம் முன்வைத்தோம். தபால் மா அதிபரிடமிருந்து மட்டும் 'ஆவன செய்யப்படும்' என்றபதிலைப் பெற்றோம் இன்று வரை இது சாத்தியப்படவில்லை. தாங்கள் எமது இந்தக் கோரிக்கையை நிறைவு செய்வீர்கள் என நம்புகின்றோம்.

சமூக மேம்பாட்டுக்காகப் பாடுபடும் நற்பணி மன்றங்கள் தமது சமூகப் பணிகளைச் சிக்கனமாகவும், சிறப்பாகவும் முன்னெடுக்க இந்த விலைக்குறைப்பு பேருதவியாய் அமைவது நிச்சயம். அத்துடன், தபாலட்டையையே தமது தகவல் பரிமாற்றச் சாதனமாகப் பயன்படுத்தும் வறிய மக்களும் இதனால் பெரும் நன்மையடைவர் என்பதும் உண்மை என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பஞ்சகுண்ட கும்பாபிஷேகம்

(மட்டுவில்)

சாவகச்சேரி கோவில் குடியிருப்பு சந்தன முதலிச்சிபுரம் ஸ்ரீ நடராஜ முருகமூர்த்தி கோவில் கும்பாபிஷேகம் ஜீன் மாதம் 7 ஆம் திகதி காலை 6.02 மணி முதல் 6.58 மணிவரையுள்ள சுபமுகூர்த்தத்தில் இடம்பெறும்.

முதல் நாள் 6 ஆம் திகதி காலை 7 மணி முதல் 4 மணிவரை பக்தர்கள் எண்ணெய்க்காப்புச் சாத்தும் நிகழ்வு இடம்பெறும். அத்துடன், கும்பாபிஷேகக் கிரியைகள் யாவும் சிவப் பிரம்ம ஸ்ரீ குமார ஸ்ரீ காந்தக் குருக்கள் தலைமையிலான சிவாச்சாரியார் குழுவினரால் நடத்தப்படும். (24)

## இந்திய வம்சாவழியினர் பதிவுகளை மேற்கொள்ளக் கோரிக்கை

(முள்ளியவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் வசித்து வரும், இதுவரை இலங்கைப் பிரஜாவுரிமை பெறாத இந்திய வம்சாவழியினர் அந்தப்பகுதி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு முல்லை மாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமார் அறிவித்துள்ளார்.

இந்திய வம்சாவழி மக்களின் நலன்கருதியே இந்தப் பதிவு மேற்கொள்ளப்படுகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (122)



தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சமூக அபிவிருத்தி திட்டத்தின்கீழ் முழங்காவில் இரணைமாதா நகரில் இடம்பெற்ற அபிவிருத்தி தொடர்பான நிகழ்வில், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் மாவட்ட இணைப்பாளர் க. ரவிக்காந்த் உரையாற்றுவதையும், நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் காணலாம். (91)

# போதிய வசதிகளற்ற நிலையில் இயங்கும் தெல்லிப்பளை மாவட்ட வைத்தியசாலை!

வலிகாமம் வடக்குப் பிரதேசத்தில் அமைந்துள்ள தெல்லிப்பளை மாவட்ட வைத்தியசாலையில் தினமும் நூற்றுக்கணக்கான நோயாளிகள் சிகிச்சைக்கு வருகின்றனர். ஆனால், அவர்களின் தேவைகளை நிறைவு செய்யும் விதத்தில் வசதிகள ஏற்படுத்திக்கொடுக்கப்படவில்லை.

பல் வைத்திய நிபுணர்கள் இருவர் கடமைபுரிகின்றபோதிலும், நோயாளர்களுக்கான பற் சிகிச்சைக்கான கதிரை ஒன்று மட்டுமே உள்ளது. இதனால், நோயாளர்கள் அதிக நேரம் காத்திருக்க நேரிடுகிறது. தற்போது பாவனையிலிருக்கின்ற கதிரையும் பழமையானது. புதிய கதிரை ஒன்று பூட்டப்பட்டுக் அறைகுறையில் உள்ளது. இதனை முழுமையாகப் பூட்டி முடிக்க அங்கீகாரம் கிடைக்கவில்லை.

அத்துடன், நீரிழிவு, மெடிக்கல் கிளினிக் நோயாளர்களுக்கான இருக்கைகள் போதியளவு இல்லாமையால், நோயாளர்கள் நீண்ட நேரம் மரங்களின்கீழும், குந்துகளிலும் உட்கார்ந்திருப்பதை அவதானிக்க முடிகிறது.

இந்த வைத்தியசாலையில்- அவசர சிகிச்சைப் பிரிவு இல்லாமையால், இங்கு வருகின்ற சிறு அறுவைச் சிகிச்சைக்கான நோயாளர்களும் யாழ்.போதனா வைத்தியசாலைக்கே அனுப்பி வைக்கப்படுகின்றனர். இதன் அவசியத்தை வலியுறுத்தி தெல்லிப்பளை பிரதேச செயலகம் 6 லட்சம் ரூபா நிதியினை ஒதுக்கித் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளது.

இங்குள்ள பல விடுதிகள் 30, 40 வருடங்களுக்கு முன்னர் அந்த ஊர்ப்பிரமுகர்களால் கட்டிக்கொடுக்கப்பட்டவையாகும். அந்தக்கட்டடங்கள் பல இடிந்து விழக்கூடிய அபாயநிலையிலேயே உள்ளன. இவற்றினைப் புனரமைப்பதற்கு இன்றுவரை எந்த அமைப்புக்களும் முன்வரவில்லை.

இந்த வைத்தியசாலை ஓர் கூட்டுறவு வைத்தியசாலை என்ற காரணத்தினால் நோயாளர்களைப் பராமரிப்பதைத் தவிர்க்க முடியாது. இதற்கு பொது நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் உடனடியாக உதவ வேண்டுமென மக்கள் எதிர்பார்க்கின்றனர். (101)

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்



இரண்டாவது அகவையில்



பெயர் : ர.பிரியதர்ஷன்,
முகவரி : கோயில் வீதி, மல்லாகம்.

நாலாவது அகவையில்



பெயர் : ம.அனுர்தா,
முகவரி : பொலிகண்டி.

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு:



கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

பெற்றோர் ஒப்பம்



சிநேகிதியே



சரோஜா தம்பு

# தலைசிறந்த கலைஞர்களை உருவாக்குவதே இறுதிவரை எனது இலட்சியம்

**நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலயத்தில் பஜனை நிகழ்வு நடைபெற்றது. அதனைப் பார்ப்பதற்காக நாம் சென்றிருந்தோம். சரோஜா - தம்புவின் பஜனை நிகழ்வில் அனைவரும் மெய்மறந்து இறை வனைப் பிரார்த்தித்த வண்ணம் இருந் தார்கள். அப்போதுதான் எமக்கும் அவருடன் கருத்துக்களை பரிமாற வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது. அவருடன் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டபோது....**

எனது பெயர் செல்வி சரோஜா - தம்பு. வயது 61 ஆகின்றது. நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்துக்கு முன்னால் வசித்து வருகின்றேன். என்னைப் பொறுத்தவரையில்- சங்கீதம், கலை நிகழ்வுகள் எல்லாம் பரம்பரை ரீதியாகவே கடத்தப்பட்டவை என்றே கூறலாம். எனது அப்பா, பெரியப்பா (சதாசிவம்) அண்ணாவியராக இருந்தவர்கள். இவர்கள் மட்டக்களப்பு, கண்டி போன்ற இடங்களில் எல்லாம் மேடையேற்றிய நாடகங்களில் பெரும் பாராட்டுப் பெற்றவர்கள். இதனால், எனக்கும் சங்கீதத்தில் மென்மேலும் ஆர்வம் அதிகமாயிறறு.

சங்கீதத்தில் முதற்குருவாக இருந்தவர் சண்முகப்பிரியா சோமசுந்தரம் அவரைத் தொடர்ந்து நடன ஆசிரியர் நல்லையா, சுப்பிரமணியம் ஆகியோர் எனக்கு சங்கீதத்தைக் கற்றுக்கொடுத்தனர். எனது ஆரம்பக் கல்வியை பொலிகண்டி தமிழ்க் கலவன் பாடசாலையிலும், பின்னர் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலும் எனது கல்வியைத் தொடர்ந்தேன்.

முதன்முதலில் மேடையேறியது 4 ஆம் வகுப்புப் படிக்கும்பொழுது. பொலிகண்டி தமிழ்க்கலவன் பாடசாலையில் நடனம், இசைக் கலைவிழாக்களில் பங்குபற்றி, அனைவரது பாராட்டுக்களையும் பெற்றேன். அதன் பின்னர் 5 ஆம் ஆண்டிலிருந்து நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் கல்வி கற்று அங்கு நடைபெறும் தமிழ்த்தினப் போட்டிகள், முழுக்கலை நிகழ்சிகளிலும் பங்குபற்றி அனைவரது மனங்களிலும் இடம் பிடித்தேன். 11 ஆம் ஆண்டில் சங்கீதத்தில் சிறப்புச் சித்தியைப் பெற்றேன். அதே ஆண்டில் சங்கீதத்தைப் பயிற்றுவித்த ஆசிரியர் கோவிந்தராஜா ஐயரின் வழிகாட்டலாலும். அதிபர் எ.ரி.சபாரட்ணத்தின் ஊக்கப்படுத்தலாலும், எனது மேற்படிப்புக்கு வழிகோலப்பட்டது.

இருவரும் எனது வீட்டில் வந்து தாய், தந்தையருடன் கதைத்து எனது 17 ஆவது வயதில் இந்தியாவிலுள்ள அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் எனது பட்டப்படிப்பைத் தொடர வைத்தனர்.

1964 ஆம் ஆண்டு பல்கலைக்கழகப் பட்டப்படிப்பை! முடித்து, "சங்கீத பூசணம்" எனும் சிறப்புப் பட்டமும் கிடைத்தது. 1967 ஆம் ஆண்டு வரை மன்னார்ப் பகுதிகளில் இசைவகுப்புக்கள், கலை நிகழ்ச்சிகள் போன்றவற்றைச் செய்துவந்தேன். அதன் பின்னர் பன்னிரெண்டு வருடங்கள் மஸ்கியமா கங்கவத்தை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றி, 1980 தொடக்கம் 1985 ஆம் ஆண்டுவரையான காலப்பகுதிகளில் தலவாக்கலையிலுள்ள ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் விரிவுரையாளராகவும் கடமையாற்றி வந்தேன்.

1985 ஆம் ஆண்டின் முற்பகுதியில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் இசை ஆசிரியையாகக் கடமையாற்றும் வாய்ப்பும் கிடைத்தது. மாணவர்களுக்குச் சிறந்த பயிற்சி கொடுத்து 1990 ஆம் ஆண்டுகளில் பல மாணவர்களைச் சிறப்புச் சித்தியும் அடையச்செய்தேன்.

இந்தக் காலப்பகுதிகளில் வடமராட்சிப் பகுதியில் சிறந்த கலைஞர்களை உருவாக்க வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது. நாடக ஆசிரியர் இளையதம்பி பத்மநாதன் மற்றும் திருமதி கந்தவனம் ஆகியோரின் உதவிகளுடன் நெல்லியடியில் ஓர் அரங்க கலாசாலையை உருவாக்கி 200 மாணவர்களைப் பயிற்றுவித்து வந்தோம்.

இந்த அரங்க கலாசாலை உருவாக்கப்பட்டதன் முக்கியநோக்கம் கலைஞர்களை வளர்ப்பதே ஒளிய பணம் சம்பாதிக்கும் நோக்கமன்று. எனது சொந்தப் பணத்தில் வீணை, வயலின், புல்லாங்குழல், நாதஸ்வரம், மிருதங்கம், சங்கீதம் எனப் பல கலைகளை வறிய மாணவர்களுக்காக இலவசமாகவும், குறைந்த கட்டணத்துடனும் நடாத்திவந்தேன். இந்தக் காலத்தில் பல்வேறு இசை, நடன, நாட்டிய நாடக நிகழ்வுகளையும் நடாத்தி முக்கிய இடத்தைப் பெற்று அனைவரது பாராட்டுக்களையும் பெற்றிருந்தேன்.

நாட்டின் போர்ச் சூழலினால், நாம் இடம் பெயரவேண்டியநிலை ஏற்பட்டது. இதனால், எமது சங்கீத வகுப்பை தொடரமுடியாமற்போய்விட்டது.

1990 ஆம் ஆண்டுகளில் - இசை, நடனத்துறை சம்பந்தமான சங்கீத பாட சேவைக்கால ஆலோசகராகக் கடமையாற்றினேன். இந்து கலாசார அமைச்சினால் "இசைக்கலை ஞானகேசரி" எனும் பட்டமும், மலை நாட்டு பகுதிகளில் கடமையாற்றிய போது, "கலைச் செல்வி" என்னும் பட்டமும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டமை என் வாழ்வில் மறக்கமுடியாதது.

சிறிதுகால இடைவெளியின் பின்னர் - மீண்டும் எமது அரங்க கலாசாலையை ஆரம்பித்து, தற்போது, வீணை, வயலின், புல்லாங்குழல், மிருதங்கம், இசை எனப் பல கலைகளையும், பட்டதாரி ஆசிரியர்களைக் கொண்டு நடாத்திவருகின்றேன்.

என்னைப் போலவே இந்த ஆசிரியர்களும் கலையை வளர்ப்பதை நோக்கமாகக்கொண்டு, செயற்படுவது மகிழ்ச்சியைத் தருகின்றது.

இதைத் தவிர பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை ஆசிரியர்கள் ஆகியோருக்கு ஏற்படும் சந்தேகங்களை நிவர்த்திசெய்வதிலும், அவர்களுக்கு வகுப்புகளை நடாத்தியும் வருகின்றேன். இவை மட்டுமன்றி, கல்வித்திணைக்களங்கள், சனசமூக நிலையங்கள், இந்து கலாசார அமைச்சுக்களினால் நடாத்தப்படும் போட்டிகள் நடுவராகக் கலந்துகொண்டும் எனது பணியைத் தொடர்ந்து வருகின்றேன்.

தற்போது புதிய பாடல்களை உருவாக்குதல், இசையை வளர்த்தல், நாட்டிய நாடகங்களை உருவாக்கி, நாடகத்துறையில் வளர்ச்சிக்குப் பாடுபடுதல் போன்ற பணிகளில் ஈடுபட்டுவருகின்றேன்.

இந்த நெருக்கடியான வேலைகளிலும் கோயில் சேவைகள், சமயத் தொண்டுகள் செய்வதற்கு யாராவது கேட்டால், எதுவித மறுப்புமின்றி என்னால் இயன்ற உதவிகளையும் செய்துவருகின்றேன்.

நான் உணவு அருந்தும் நேரம் தவிர்ந்த ஏனைய எல்லாநேரங்களிலும் சங்கீதத்தை வளர்ப்பதற்காகவே செயற்பட்டு வருகின்றேன்.

இது எனது இலட்சியம் - இறைவனின் பாதத்தில் வீழ்ந்து கேட்பதுவும் ஒன்றுதான்.

அதாவது, எனது இறுதி மூச்சுவரை நோய்நொடியின்றி கலைக்காகவே என்னை அர்ப்பணிக்கும் பாக்கியத்தையும் நான் இறப்பதற்கு முதல், வடமராட்சிப் பகுதியிலேயே தலைசிறந்த கலைஞர்களை உருவாக்க வேண்டும் எனபதே எனது அவாவாகும் என்று உணர்ச்சிபூர்வமாகக் கூறினார்.

**நேர்காணல் - க.கனெக்ஸ்**

# மிளகின் முக்கியத்துவம்

**பெ**ரும்பாலும் மிளகு சேர்க்காத சமையலே இல்லை என்று சொல்லத் தக்க அளவுக்கு மிளகின் முக்கியத்துவம் உயர்ந்திருக்கிறது. மிளகு எவ்வகைப்பட்ட நஞ்சுகளையும் முறிக்கும் ஆற்றல் பெற்றதாக அமைந்துள்ளது. ஒருவன் நஞ்சு கலந்த உணவு வகைகளை உண்டு விட்டால், இரத்தத்தில் கலந்துவிட்ட நஞ்சை முறிக்க மிளகு பயன்படுகின்றது.



நோய்களைத் தீர்த்து வைக்கும் ஆற்றல் பெற்றதாக மிளகு விளங்குகிறது.

- ☆ இதய நோய்கள்
- ☆ காமாலை
- ☆ சமிபாட்டுக் கோளாறுகள்
- ☆ தொண்டை சம்பந்தமான நோய்கள்
- ☆ இருமல்
- ☆ வாதம் சம்பந்தப்பட்ட நோய்கள்
- ☆ குளிர், காய்ச்சல்

ஆகியவற்றைக் குணமாக்கும் தன்மை மிளகில் உள்ளது. இதைவிட வாதம், கபம் சம்பந்தப்பட்ட நோய்களையும் பரிபூரணமாகக் குணமாக்குகிறது.

சிலருக்கு சிரங்கு வந்து கொண்டே இருக்கும். என்னதான் முயன்றாலும் சிரங்கை முழுமையாகக் குணப்படுத்தவே முடியாது. அப்படிப்பட்ட நிலைமையில் உள்ளவர்கள் - மிளகை உபயோகித்துச் சிரங்கின் தொல்லையிலிருந்து விடுபடலாம். மிளகைக் கொஞ்சம் எடுத்து அடுப்பில் வைத்து வறுக்கவும். மிளகிலிருந்து தீப்பொறிகள் கிளம்பும் வரையில் வறுத்து பின் சற்று சிறிதுநேரத்தில் அந்த மிளகு - சாம்பலைப்போல நீர்த்துப்போகும். அந்தத் தூளில் சிறிதளவு எடுத்துக்கொள்ளவும். இதில் தேங்காய் எண்ணெய் சிறிதளவுவிட்டு நன்றாகக் குழைத்துக் கொள்ளவும்.

உடலின் மேல் எங்கெங்கு சிரங்குகள் உள்ளனவோ அதன்மீது குழையலைப் பூசி வரவும். எப்படிப்பட்ட ஆறாத சிரங்காக இருந்தாலும் ஆறிவிடும். வாய்வு சம்பந்தமான நோய்களுக்கு மிளகு அருமருந்தாகத் திகழ்கின்றது எனலாம்.

மிளகிலுள்ள காரத்தன்மை உடலின் சூட்டைக் கூட்டும் என எண்ணுவது தவறு. மிளகு உடலுக்குக் குளிர்மை தருகின்றது.

மிளகில காரத்தைத் தவிர அப்படி என்ன விசேஷம் இருக்கின்றது. நார்ப்பொருள், காபோவைதரேற்று, கல்சியம், பொஸ்பரஸ், இரும்பு ஆகிய சத்துக்கள் இடம்பெற்றிருக்கின்றன. மிளகின் காரம் மிளகாயின் காரத்தைப்போல் அப்படி ஒன்றும் கடுமையானது அல்ல. இதனால், காரத்திற்குப் பலபேர் மிளகையே பயன்படுத்துகின்றார்கள். மிளகு இரசத்தை ஆங்கிலேயர்கள் உணவுடன் சேர்த்துக் குடிக்கிறார்கள். இறைச்சி உணவிலும், முட்டை உணவிலும் மிளகுத் தூளைத் தூவிச் சாப்பிடுகிறார்கள். இது ஜீரணத்திற்கு உதவுகின்றது.

வாத நோய்களைப் போக்கவும், நரம்புப் பலவீனத்தைப் போக்கவும் மிளகு பயன்படுகிறது.

தேள் கடித்து அவஸ்தைப்படுகின்றவர்கள் - ஒரு பெரிய வெற்றிலையில் பத்து மிளகை வைத்து மடித்து மென்று விழுங்கினால் தேள் விஷம் நீங்கும். கடுகடுப்பு நிற்கும்.

மிளகு இதுபோல் சிறுசிறுநோய்களுக்கு மருந்து என்றவகையில் உதவுகின்றது. அதை உணவாக உட்கொள்வதால், பல நோய்கள் நம்மை விட்டு நீங்குகின்றன.

# சிநேகிதிக்கு ஒரு மடல்



அன்புள்ள சிநேகிதியே!

உன் நலம் நாடும், உன் அன்புத் தோழி எழுதும் மடல். நண்பியே நமது கலாசார பண்பாடு பற்றிய கருத்து வேறுபாடுகள் எம் நட்பில் களங்கத்தை ஏற்படுத்திவிடாது என்ற நம்பிக்கையுடன் உனக்கு சில கருத்துக்களை எடுத்துரைக்க விரும்புகின்றேன்.

நமது சமூகத்திலே ஆணாதிக்கத்தையும், பெண்ணடிமையையும் உற்பவித்துப் போட்டவர்கள் பெண்கள்தான் என்ற உனது கருத்தோடு என்னால் உடன்பட்டுப்போகமுடியாது.

என் பிரிய தோழியே உன்னைப் போன்று பண்பாட்டின் கனத்தைக் காற்றில் எரிக்க நாங்கள் இன்னும் கைவிரிக்கவில்லை, கைவிரிக்கப் போவதுமில்லை. மழை காலத்துப் பறவைகள் தாழத் தாழப் பறப்பது போன்று, எமது கலாசாரப் பண்பாட்டு விழுமியங்களைக் குறுக்கிக் கொள்ள எம்மால் முடியாது.

எமது பண்பாடும், கலாசாரமும் பெண்களை மையப்படுத்தியே வளர்க்கப்பட்டவை என்பது உனக்குப் புரியாது. தாய்ப்பால் கொடுப்பது நாகரீகமற்றது. எனத் தகரப்பாலினைத் தம் குழந்தைகளுக்கு ஊட்டும் பெண்களது சமூக அமைப்பில் வாழும் நீ இது பற்றி அறிந்திருக்கச் சாத்தியமில்லை.

எமது சமூகப் பண்பாட்டு விழுமியங்களைக் கட்டிக் காக்கும் பாதுகாவலர்களாகப் பெண்களே காணப்படுகின்றார்கள். எமது பண்பாட்டையும், கலாசாரத்தையும் ஒரு பெண் அடையாளப்படுத்துவது உனக்கு அடக்குமுறையாகத் தெரிகின்றது.

ஒரு பெண்ணின் நெற்றியிலிருக்கும் குங்குமம் ஒன்றும் அடக்கு முறையின் அடையாளமல்ல. ஒருவன் தன் மீது தவறாக ஆசை கொள்ளக்கூடாது என்பதற்காக, தான் ஒருவனின் தாரம் என்பதை உணர்த்தும் அடையாளமே. அதே போன்று தாலி என்பதும் பெண்ணுக்கு ஒருபோதும் வேலியல்ல. திருமணத்தின்போது கண வனால் கட்டப்படும் தாலியானது ஒரு பெண்ணோடு எப்பொழுதும் இருப்பது போன்று கணவன் - மனைவி உறவு இருக்கவேண்டும் என்பதற்காகவே எம்மவர் ஏற்படுத்திய நடைமுறை இது. திருமணமான பெண்ணின் உள்ளத்திலே அவளது கணவன் இருக்கின்றான் என்பதை உணர்த்தும் புற அடையாளமே தாலி.

கணவன் மட்டும் பார்க்கும் அழகைக் கடைகள் போட்டுக் காட்டும் மேலைத் தேயக் கலாசாரத்தோடு ஒப்பிடும் போது, கட்டிய காஞ்சிபுரமும் நெற்றித் திலகமும் உனக்கு அடக்குமுறையின் அடையாளங்களாகத் தெரிவதில் அதிசயம் ஒன்றுமில்லை.

நல்லதொரு சமுதாயத்தை உருவாக்கும் ஒரு உன்னத சிற்பியாகவே பெண்ணை நமது சமூகம் நோக்குகின்றது. ஒரு சிலையினைச் செதுக்கும் ஒரு சிற்பிக்கு எவ்வளவு பொறுமை, நிதானம், சகிப்புத் தன்மை என்பன வேண்டுமோ அதைவிட பல்லாயிரம் மடங்கு பொறுமையும், நிதானமும் ஒரு உயிருள்ள சமூகத்தையே உருவாக்கும் பெண்ணுக்குத்தேவை. சிற்பம் அழகுபெறுவது போன்று பெண்ணினது பொறுமையும் நிதானமுமே நல்லதொரு நாளைய சமூகத்தை உருவாக்கும் என்பதை உணர்தே சில அறிவுரைகள் பெண்களுக்கு வழங்கப்படுகின்றது. இவற்றை நீ அடக்குமுறை என எண்ணுவது உனது தப்பு. எனவே, எமது பண்பாடு பற்றிய உனது பார்வையை மீள்பரிசீலனை செய்து கொள் எனக்கூறி என்மடலை நிறைவு செய்கின்றேன்.

**அன்புள்ள சிநேகிதி**
**நீலா**

# நிஞ்சமுகத்தின் தேடல்



ராசாத்தி...! ராசாத்தி... எல்லோரும் அவளை அப்படித்தான் கூப்பிட்டார்கள். நான் பாடசாலையால் வரும்போது, அவள் மதவில் குந்தியிருப்பாள். பரட்டைத்தலை!... மெலிந்த உருவம். ஆனால், நல்ல வெள்ளை நிறம். எனக்கு அவளைப் பார்க்கும்போது பாவமாக இருக்கும். சிலவேளைகளில் ஒரு பாண் துண்டைக் கடித்தபடி என்னைப் பார்க்கும் பார்வையில்... எனக்கு ஏதோ செய்யும். நான் அவளோடு பேசவேண்டும் என்று நினைப்பேன். ஆனால், என்னுடைய சிநேகிதிகளுக்கு அவள் ஒரு பைத்தியம் என்ற நினைப்பு. நான் ஒரு நாளைக்கு அவளோடு பேசவேண்டும் என்று மனதுக்குள் படம் போட்டு வைத்திருந்தேன்.

அண்டைக்கு நான் பாடசாலையாலை வீட்டை வந்தபோது, வீடு ஒரே ஆரவாரமாக இருந்தது. வெளிநாட்டிலிருந்து என்னுடைய மாமா குடும்பத்தோடு வந்திருந்தார். அவர் வெளிநாட்டுக்குப் போய் 18 வருடம் இப்பதான் திரும்பி வந்திருக்கிறார். எங்கடை அப்பாவும் வெளிநாட்டில்தான். அவர் போனவருடம் வந் திட்டுப் போனார். இப்ப மாமா குடும்பம் வந் திருக்கு. வீடு நிறைய அவையள் கொண்டு வந்த பெட்டியள் நிரம்பிக்கிடக்கு. எங்கடை மாமி வெளிநாட்டுப் பொம்பிளைதான். ஆனால், தமிழ் நல்லாக் கதைக்கிறா. மாமாவுக்கு 6 பிள்ளை யள். ஒரு மகன்தான் அவன்தான் கடைக் குட்டி. இப்ப எட்டுமாதம்.வீடெங்கும் தவழ் கிறான். மற்றப் பிள்ளையள் எல்லாம் தமிழ் கதைக்குது. எனக்கு நல்ல சந்தோஷம். மாமி யும் சீலை கட்டி, பொட்டு வைச்சு, தலையைப் பின்னியிருக்கிறா. மாமா கெட்டிக்காரன்தான். எங்கடை பண்பாட்டை அவவுக்குப் பழக்கி விட்டார். மத்தியானம் எல்லோரும் சாப்பிட்ட போது... மாமா சொன்னார். "அக்கா! நான் இந்தமுறை காவடி எடுக்கப்போறன். அம்மா சொன்னா 'என்ன பகிடி விடுகிறாயோ... கோயி லோடை விளையாடாதை. மாமா திரும்பியும் சொன்னார். 'நான் வெளிநாட்டிலை ஒருமுறை விபத்திலை சிக்கினபோது நேர்ந்து போட்டன். எடுக்கப்போறன். அம்மா ஒன்றும் பேசவில்லை. அரை மனதோடை சம்மதம் சொன்னார்.

வெள்ளிக்கிழமை கோயில் மடை. காவடி எடுக்கவேண்டும். மாமி பாற்செம்பு, மாமா வின்ரை இன்னொரு மகனும் காவடி, மகளும் பாற்செம்பு எடுக்கிறார்கள். எல்லோரும் கோயி லிலை போய் காவடி, கரகம், பாற்செம்பு எடுப்ப வர்களுடன் சேர்ந்தோம். எனக்கு எல்லாம் புதினமாயிருந்தது. எல்லாம் ஆட்டக்காவடி மாமாவும், மகனும் பறைமேளத்திற்குத் துள் ளித்துள்ளி ஆடிச்சினம். நான் பின்னாலை நின்று பார்த்துக்கொண்டிருந்தேன். ராசாத்தியும் ஒரு செம்பைத் தலையிலை வைச்சுக்கொண்டு, ஆடிக்கொண்டிருந்தா, எனக்கு அவவின்ரை ஆட்டத்தை பார்க்க வித்தியாசமாக விருந்தது. மாமிக்குக் கிட்ட வந்து ஆடிக் கொண்டிருந்தா, மாமிக்கு ராசாத்தியைப் பார்க்க பயமாக விருந்தது. எங்கடையம்மா அவ வுக்கு கிட்டப்போய் நின்றா. ஒரு மாதிரி காவடி யொல்லம் இரக்கியாச்சு. நான் ராசாத் தியையே பார்த்துக் கொண்டிருந்தேன். ராசாத்தி பேசாமல் குந் தியிருந்தா.

அடுத்த நாள் பின்னே ரம் நல்ல மழை இரவிரவாக பெய் தது. மாமாவின்ரை பிள்ளையளுக்கு நல்ல கொண்டாட்டம். வெள்ளத்திலே நின்று கூத் தடிச்சினம். நானும் சேர்ந்து தான் வெள் ளத்திலே விளையாடினேன். அன்று இரவு எல்லோருக்கும் நல்ல காய்ச்சல். மாமி யின்ரை சின்னவனுக்கும் நல்ல காய்ச்சல். காரிலைபோய் எல்லாருக்கும் மருந்து எடுத்து கொண்டுவந்தம். இரண்டுகிழமை ஓடிவிட்டது. மாமா குடும்பம் மூட்டை கட்டிக்கொண்டு வெளிநாட்டுக்குப்போய்விட்டது. எனக்குப் பொழுதுபோகவில்லை. பள்ளிக்கூடத்தாலை வீட்டை வந்தால், விசரக இருந்தது. அம்மா மாமா கொண்டுவந்த பொருட்களை அடுக்கி வைப்பதில் கவனமாக இருந்தா.

வெளியாலை தெருவிலை ஒரே ஆரவார மாகவிருந்தது. நான் ஓடிப் போய்ப் பார்த்தேன் ராசாத்தி... கையில் ஒரு சின்னப்பெட்டி யோடை நின்றா. பெட்டி நிறைய மாம்பழங்கள். நான் திக்கப்பனேன். மாம்பழத்தை என்னை எடுத்துக்கொண்டுபோகும்படி சென்னா. நான் பேசாமலிருந் தேன். அம்மா ராசாத்தியைப் பேசினா. என்ன ஊத்தைக்கே கிடந்தழமோ! கொண்டு போடி! எங்களுக்கு வேண்டாம். நான் அம்மா விட்டை சொன்னேன், அம்மா அவவிட்டை வேண்டு வோம் பிறகு சாப்பிடாமல் விடலாம்தானே... எனக்கு இப்ப நினைவுக்கு வந்தது. கோயில் பூசைமுடிய மறுநாள் மாமி யும் ராசாத்தியும், ரகசியமா கக் கதைத்துக் கொணடு இருந்தினம். மாமிக்கு மாம்பழம் நல்ல விருப் பம் எண்டு ராசாத்திக் குச் சென்னவ பாவம். மாமி வெளிநாட்டுக்குப் போனது ராசாத்திக் குத் தெரியாது.

மாம்பழம் வேண் டிக கொண்டுவந்திருக் கிறா. அம்மாவோ ஒரேபிடியா வேண் டாம் என்று சொன்னா. எனக்கு ராசாத்தி யைப் பார்க்க பாவ மாயிருந்தது. மாம் பழத்தை எடுத்துக் கொண்டு, எங்களைத் திரும்பித்திரும்பிப் பார்த் துக்கொண்டு போனா. எனக்கு ஒரு நல்ல யோசனை வந்தது.

வீட்டுக்குள்ளே போனேன். சின்ன மேசைக் கத்தியை எடுத்து சட்டைக்குள் மறைத்துக் கொணடு, மெல்ல நழுவினேன். அம்மா என்னைக் கவனிக் கவில்லை. ஒழுங்கை மதவடிக்குள் நான் வந்தபோது, ராசாத்தி மதவில் குந்தியிருந்தா.

நான் கத்தியை அவவிட்டைக் குடுத் தன். அந்த முகத்தில் ஒரு சிரிப்பு வந்தது. கத்தியை வாங்கி, மாம்பழங்களின் தோலைச் சீவினா. வட்டம் வட்டமாக வெட் டினா.

என்ரை கையிலை தந்தா நான் வாங் கிச் சாப்பிட்டேன். நல்ல இனிப்பு. ராசாத் தியும் சாப்பிட்டா. சாப்பிட்டு முடிய பேணிக் கையிருந்த தண்ணியிலை கையைக கழுவினம். பிள்ளை எனக்கு ஒரு ஆசை ராசாத்தி சொல்லத் தொடங்கினா. உங் கடை மாமிக்கு மாம்பழம் வெட்டிக்குடுக்க வேணும் எண்டு.

ஆனால், அவா எனக்குச் சொல்லாமல் போட்டா. அது பரவாயில்லை ஆனால், உங்கடை மாமா... நீ சின்னப்பிள்ளை! என்னத்தைச் சொல்லுறது. அந்தநாளை யிலை என்னைக் கலியாணம் கட்டுற தெண்டு சத்தியம் செய்துதந்தவர்.

பிறகு ஒண்டுமே சொல்லாமல் வெளி நாட்டுக்குப் போய்விட்டார். எனக்கு ஒரு அதிர்ச்சி ஏற்பட்டது. மாமியை ராசாத்தி உற்றுப்பார்த்ததெல்லாம் இதுக்குத்தானோ. அதுதான் பைத்தியாமாகப் போனா... என் னைக் கூட்டிக்கொண்டு கோயிலுக்கு நேத் தியும் வைச்சவர்.

செடில் குத்தி காவடி எடுக்கிறதெண்டு சொன்னவர். ஆனால், சாமி அவன்ரை நேத்தியை நிறைவேற்றிவிட்டார். எங்கை என்றாலும் அவர் சுகமாக இருக்கட்டும். இப்ப கட்டியிருக்கிற பொம்பிளையும் நல்ல பிள்ளைதான்.

ராசாத்தி சொல்லச் சொல்ல எனக்கு மாமிமீது கோபம் கோபமாக வந்தது. காவடி எடுப்பதற்கு அம்மாட்டை ஏன் பொய் சொன்னவர். ஆனால், இப்ப அவர் ஏன் காவடியெடுத்தார். எண்டு விளங்கி விட்டது.

ராசாத்தி செல்ல மோனே இருளப்போ கிறது நீ கெதியாய் வீட்டைபோ. நான் எழும்பி வீட்டை நோக்கி நடந்தேன். ராசாத்தி திடீரென்று எனக்குப் பின்னால் ஓடிவந்தா.

என்னைக் கட்டிப்பிடித்து முத்தமிட் டாள். அவாவின்ரை கண்ணீர் கலந்த முத்தம் எனக்கு உடம்பிலை மின்சாரம் பாய்ந்தது போல இருந்தது.

பாவம் ராசாத்தி இனி ஒவ்வொரு நாளும் அவளோடை நின்று கதைக்க வேணும் என்று, நான் தீர்மானம் செய்து விட்டேன். ❑

மனோன்மணி சண்முகதாஸ்.

# அகத்தின் அழகு முகத்தில் தெரியும்

அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பார்கள். ஒரு நபரைப் பற்றி, ஒரு பெண்ணைப் பற்றி அபிப்பிராயங்களைத் தோற்றுவிப்பது அவர்களின் நடை, உடை, பாவனை, தோற்றம் ஆகியவையே. அவர்கள் என்னதான் அறிவாற்றல் மிக்கவர்களாக இருப்பினும், அவையெல்லாம் இரண்டாம் பட்சமதான்.



எனவே, தோற்றப்பொலிவு சிறந்து விளங்குவதற்கு என் னென்ன நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும் எனப் பார்த்தால், பெண் அழகாக இருந்தால், நிச்சயமாக ஆரோக்கியமானவளாக இருப்பாள். அவளிடம் தன்நம் பிக்கை இருக்கும். ஈடுபாடுள்ள துறையில் வெற்றிக் கொடிநாட்டுவாள்.

பெண்கள் உடல் அழகைப் பராமரிப்பதில் இயற் கையாகவே ஆர்வம் கொண்டிருப்பார்கள். பணக் கார வர்க்கத்திலுள்ள பெண்கள் தங்கள் அழகான தோற்றத்திற்காக நிறையப் பணத்தைச் செலவு செய்வதோடு அதற்குக் கூடுதலான நேரத்தையும் செலவு செய்கிறார்கள்.

நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள்- தமது அன்றாட வேலைகளான - குடும்பம், குழந்தை கள், அலுவலகப்பணி, பொதுவேலைகள் என்று அல்லற்படுவதால், உடல் அழகைப் பேணு வதில் ஆர்வம் இருந்தும், சிரமப்படுகிறார்கள். இவர்களுக்கு குழந்தை பிறந்த பின்னர், உட லின சில பகுதியில் தேவையற்ற தசை வளர்சசி ஏற்பட்டு உடல் அழகுக்கு அதுவே எதிரியாக மாறிவிடுகிறது.

அதேசமயத்தில், மெல்லிய உடல்வாகு கொண்டவர்களுக்கு தேவையான தசைப் பற்று இல்லாமையினால் அழகில் குறை உண்டாகிறது. இதைத்தவிர மார்பக வளர்ச்சிக் குறைவு, முகப்பரு, கண்களில் கருவளையம், தோன்றுவது, இடுப்பில் அதிக தசை வளர்ச்சி போன்ற காரணங்களால் பெண்கள் மன உளைச்சலுக்கு ஆளாகின்றனர்.

அதிகநிறை, அதிக இரத்தஅழுத்தம், மூட்டுவலி போன்றவற்றாலும் பெண்கள் அவதிப்படுகிறார்கள். இந்தத் தொந்தரவுக்கெல்லாம் மூலிகைகளால் நல்லபலன் உண்டு. உடலில் வயிறு, இடுப்பு, கால்கள் போன்ற பாகங்களில் அளவுக்கதிகமாக தசை வைப்பதால் ஏற்படும் பிரச்சினைக்கு பெல்லிரோலர் என்னும் கருவியைப் பயன் படுத்துகிறார்கள். இந்தக் கருவியை தசை மிகுந்த பகுதிகளில் சுழலவிட்டு கரைந்த கொழும்பு நீராவிக் குளியல்மூலம் அகற்றச் செய்கின்றார்கள்.

இந்த நீராவிக் குளியல் இயல்பாகவே அழகுடன் இருப்பவர்களுக்குச் சிறந்த சிகிச்சையாகும். இதன்மூலம் உடலில் தேவையற்ற கொழுப்பு அசுத்த நீர் அகன்று உடல் அழகு அதிகரிக்கின்றது. பெண்களைப் பொறுத்தவரையில் இன்னொரு பிரச்சினை முகத்தில் தேவையில்லாத முடிமுளைப்பது சில ஓமோன்களினால்தான் இந்தப் பிரச்சினை ஏற்படுகின்றது.

இவற்றை அகற்றவும், முகத்திலும் உடலிலும் பளபளப்பும், பொன்னிறமும் உண் டாக்க மிகச் சரியான மூலிகைச் சிகிச்சைகள் உள்ளன.

இதைவிடக் கண்களுக்கு கீழே உண்டாகும் கருவளையம் தோலில் ஏற்படும் சுருக்கம் - இந்த இரண்டையும் மூலிகைச் சிகிச்சை முறையினால் நீக்கலாம். முகப் பருக்களை நீக்க மெல்லிய மின்காந்த அலையைப் பாய்ச்சி சிகிச்சை அளிப்பது நல்ல பலனைத் தருகிறது.

இந்தச் சிகிச்சை முறையினால் பலரும் ஆச்சரியப்படத்தக்க வகையில் பலன் பெற்றுள்ளனர்.

# வயிற்றைப் பாதுகாக்கும் மாதுளம் பழம்



களைப்பைப் போக்கித் தாகத்தைத் தணிக்கும் பழமாக மாதுளம்பழம் விளங்குகின்றது. பண்டைய காலத்திலிருந்தே மாதுளம்பழம் மிக உயர்ந்த உணவாகவும், மருந்தாகவும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. காய்ச்சல் நேரத்தில் மிகவும் தாகமாக இருக்கும். எவ்வளவு நீரைக் குடித்தாலும் குறையப்போவதில்லை. அந்த நேரத் தில் மாதுளம்பழச்சாறு அருந்தினால் உடல் தாகம் தணியும். நோயாளிகளுக்குப் பசியும் ஏற் படும்.

மாதுளம்பழத்தின் தோல், விதை, மரத்தின்வேர், இலைகள் என ஒட்டு மொத்தமாக மாதுளை மரமே மருத் துவக் குணங்களுடன் திகழ்கின் றது. இந்தியா, ஈரான் மற்றும் சில போன்ற நாடுகளில் எளிய உணவாக மட்டுமல்ல இதய நோய்களுக்கும் பயன் படுத்துகின்றார்கள். வயிற்றுப்புண், இதயவலி ஆகியவற்றுக்கும் மாதுளை சிறந்த மருந்து. பழத்திலுள்ள இனிப்பும், துவர்ப்பும் சிறந்த பேதி மருந்தாகவும் செயல்படுகின்றது.

கல்லீரல், இதயம், சிறுநீரகம் முதலியவற்றைச் சிறப்பாக இயங்கச் செய்யவும். மாதுளம் பழச்சாறு உடனடியாக நிவாரணம் அளிக்கின்றது. இதனால், நோயாளியின் துன்பம் குறைந்து குணமாகவாய்ப்பு ஏற்படுகின்றது. நெருப்புக்காய்ச்சலின் தீவிரம் உடனே குறைய மாதுளம் பழச்சாறு உதவுகின்றது.

இந்தப் பழத்திலுள்ள தாதுப்புக்களும் உணவிலிருந்து கிடைக்கும் விற்றமின் A யும் கல்லீரல் பழுதாகாதபடி பாதுகாக்கிறது.

வயிற்றுவலி, குடல் சம்பந்தமான நோய்கள், சளி, சமிபாட்டுக் கோளாறு, வயிற்றில் மந்தம் முதலியவற்றுக்கு மாதுளம் பழச்சாறு கைகண்ட மருந்தாகும்.

பித்த வாந்தி எடுப்பவர்கள் மாதுளம் பழச்சாற்றுடன் சிறிதளவு தேனையும் சேர்த்துச் சாப்பிட்டால் உடன் பயனளிக்கும். காலையில் எழுந்ததும் காய்ச்சல் என்று உணர்பவர்களும், இரத்ததத்திலிருந்து பித்த நீர் பிரிக்கப்பட்டு வெளியேற வேண்டும் என்று எண்ணுபவர்களும் இதே முறையில் மாதுளம் பழச்சாற்றையும், தேனையும் சேர்ந்துச் சாப்பிட்டால் போதும் இந்த நோய்களுக்கான பலனைப் பெறலாம்.

இரத்தத்துடன் மலம் வெளியேறினால் 50 மில்லி மாதுளம்பழச் சாற்றை அருந்தினால் போதும், இந்தச் சாற்றிலுள்ள துவர்ப்புச் சுவையோ மருந்தாகச் செயற்பட்டு வயிற்றுப் போக்கு சீதனபேதி முதலிய நோய்களை கட்டுப்படுத்தி விடுகின்றது.

இந்தப் பழத்தின் விதைக்கு சிறுநீர் கற்களை வளரவிடாமல் செய்யும் ஆற்றல் உண்டு. கற் கள் உருவாகாமல் பார்த்துக்கொள்கின்றதனால் விதைகளையும் சாப்பிடுவது அவசியமாகன்றது.

# இந்த வார பலன்கள்
## 28.05.2004 - 03.06.2004 (திருக்கணிதம்)

| | | | |
|---|---|---|---|
| | புத ராகு | சூ | செவ் சுக் சனி |
| யுரே | 28இரவு 10-26 கன்சந்<br>28மாலை6.00இட-சுக்<br>30பி.இ.2.55துல-சந் | | |
| நெப் | 01பி.இ.4.09விரு-சந்<br>02பகல்10.26இட-புத<br>03பி.இ.3.37தனு-சந் | | குரு சந் |
| | | கேது | |

### மேடம்
*(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)*



இவ்விராசியில் பிறந்தவர்களுக்கு தொழில்துறையில் சில சிரமங்கள் தோன்றும். குடும்பத்தில் சில கருத்து வேற்றுமைகள் ஏற்படலாம். குடும்பச் செலவுகளைச் சமாளிப்பதில் பல இடர்பாடு இருக்கும். தேவைக்குப் போதுமான வருவாய் கிடைப்பது கடினம். தேகசுகக் குறைவு இடையிடையே காட்டும். வைத்தியச் செலவும் அதிகமாகும். தொடங்கும்கருமங்கள் நிறைவேறுவதில் தாமதம் காணும். வர்த்தகர்களுக்கு வியாபாரத்தில் மந்த நிலையே காட்டும். மறைமுக எதிரிகளைப் பற்றி அவதானமாக இருக்கவும். தொழில் துறையில் ஈடுபட்டுள்ளவர்கள் பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருக்கும் மாணவர்கள் கல்வியில் ஊக்கமெடுத்தல் வேண்டும்.

### இடபம்
*(கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகினி, மிருகசீரிடம் 1,2 ஆம் பாதங்கள்)*



இடபராசியில் ஜனனமானவர்களுக்கு தொழில்துறை சிறப்படையும். குடும்பஸ்தர்களுக்கு அமைதி குறைவாக இருக்கும். பணக்கஷ்டம் இருந்தாலும் ஓரளவு சமாளிக்க முடியும். உறவினர்களால் உதவியும், ஆறுதலும் கிடைக்கும். அடிக்கடி பிரயாணம் செய்ய வேண்டியேற்படுவதால் செலவு அதிகமாகும். திருமணம் சம்பந்தப்பட்ட விடயங்களில் இழுபறி நிலை காணும். தனித் தொழில் நடத்துபவர்களுக்கு போட்டிகள் அதிகரிக்கும். உத்தியோகத்திலுள்ளவர்களுக்கு வேலைப்பழு அதிகமாகும். சகதொழிலாளர்களின் உதவிகள் குறைவாகவே இருக்கும். வர்த்தகர்களுக்கு தொழில் மந்தமாக நடக்கும். லாபம் குறையும் மாணவர்களுக்கு முன்னேற்றம் உண்டு. கலைத்துறையினர் கூடுதல் சித்திபெறுவர்.

### மிதுனம்
*(மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள் )*



மிதுனராசியில் பிறந்தவர்களுக்கு ஏழரைச் சனிநடுப்பகுதி நடக்கிறது. வியாழ சுகமும் குறைவு. குடும்பத்தில் பலவிதமான தொல்லைகளைச் சமாளிக்க வேண்டியிருக்கும். இனபந்துககளிடையே, சகோதரர்களிடையே கருத்து வேற்றுமைகள் ஏற்படும். தேக சுகமும் பாதிப்படையக்கூடும். திருமண நிகழ்வுகள் காலந்தள்ளிப் போகும். பண வருவாயில் தடங்கல்கள் ஏற்படும். வர்த்தகர்களுக்கு முதலீடுகள் தேங்கிக் கிடக்கும். வியாபாரம் நட்டத்திலேயே நிகழும். உத்தியோகத்திலுள்ளவர்களுக்கு தொழிலில் மாற்றம் ஏற்படலாம். வேலைப்பழுவும் அதிகமாகும். மாணவர்களுக்கு கல்வியில் தடங்கல்கள் காணும்.

### கடகம்
*(புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)*



கடகராசியில் ஜனனமானவர்களுக்கு இவ்வாரம் சிறப்பான பலன்கள் நடக்கும். குடும்பத்தில் ஒற்றுமை, சிறப்பு உண்டு. எடுத்த கருமங்கள் தாமதமின்றி அனுகூலமாகும். கடன் தொல்லைகள் இருந்தால் நீங்கும். பொருளாதார நிலை சிறப்படையும். தேகாரோக்கியம் பாதிப்படையாது. குடும்பப் பெண்கள் மகிழ்ச்சியுடன் காணப்படுவார்கள். திருமணப் பேச்சுக்கள் நல்ல முடிவைத் தரும். மகிழ்ச்சியில் திளைப்பர். வர்த்தகர்களுக்கு வியாபாரம் 'ஓகோ' என்று சிறப்பாக நடக்கும். புதிய வாடிக்கையாளர்கள் வந்து சேருவார்கள். பணவருவாயும் நன்று உத்தியோகத்தர்களுக்கு தொழில் மாற்றங்கள் ஏற்படலாம். அதிகாரிகளின் ஆதரவும், செலவாக்கும் உண்டு. மாணவர்கள் கல்வியில் முன்னேற்றமடைவார்கள். சிலருக்கு வெளிநாட்டுக் கல்வி வாய்ப்பு ஏற்படலாம்.

### சிங்கம்
*(மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்)*



சிங்கராசியல் பிறந்தவர்களுக்கு ஜென்ம வியாழன் நடக்கிறது. குடும்பத்தில் நிம்மதிக் குறைவும் வீண் வாக்குவாதங்களும் ஏற்படும். உறவினர்களால் சிக்கல்கள் உருவாகும். பணவருவாய் குறைவாக இருக்கும். குடும்பப் பெண்கள் சிக்கனமாக வாழப் பழக வேண்டும். இடையிடையே தேகசுகம் பாதிக்கப்படலாம். விவாகப் பேச்சுக்கள் தாமதமடையும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக நடந்தாலும், பணச்செலவுகள் அதிகமாக காட்டும். வாடிக்கையாளர்களைத் திருப்திப்படுத்த வேண்டியிருக்கும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பழு அதிகமாகும். வருவாய் போதாமலிருக்கும். முன்னேற்றங்களும் தாமதமடையும். மாணவர்கள் வீண்வாக்குவாதங்களால் முன்னேற்றம் தடைப்படும்.

### கன்னி
*(உத்தரம் 2, 3, 4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்)*



கன்னிராசியில் ஜனனமானவர்களுக்கு வியாழ சுகம் குறைவாக இருப்பதால், குடும்பத்தில் மன அமைதி குறைவாகவே இருக்கும். கணவன், மனைவியிடையே கருத்து வேற்றுமை தோன்றும். இன பந்துக்கள் ஒற்றுமையாக இருக்கமாட்டார்கள். பணப் புழக்கம் சற்றுக் குறைவாகவே இருக்கும். எல்லாவற்றிலும் சிக்கனத்தைக் கையாள்வது நன்று தொடங்கும் கரும்ங்கள் தாமதத்தின் மேல் நிறைவு பெறும். உடல்நலம் பேணுவது நன்று விவகாப் பேச்சுக்கள் தாமதத்தை ஏற்படுத்தும். வர்த்தகர்களுக்கு வியாபாரத்தால் வருவாய் குறைவாகவே இருக்கும். அலைச்சல் கூடுதலாக இருக்கும். உத்தியோகத்தர்கள் மற்றவர்களுடைய வேலையையும் சேர்த்துச் சமாளிக்க வேண்டிருக்கும். மாணவர்களுக்கு முன்னேற்றம் மத்திமமாகும்.

### துலாம்
*(சுவாதி , விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள் சித்திரை 3 ஆம், 4 ஆம் பாதங்கள்)*



துலாராசியில் பிறந்தவர்களுக்கு வியாழன் லாபஸ்தானத்திலிருப்பதால் குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும், குடும்பத்தில் ஒற்றுமை வலுக்கும். பண வரவு திருப்தியளிக்கும். பெரியவர்களின் உதவி கிடைக்கும். தூர தேசத்திலிருந்து நற்செய்தி, வருவாய் முதலியன வந்து சேரும். எதிர்பார்ப்புகள் ஓரளவு கைகூடும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் நன்றாக நடக்கும். வங்கி உதவிகளும் உண்டு. புதிய முதலீடுகளுக்கு நன்று. திருமணப் பேச்சுக்கள் நல்ல பலனைத் தரும். உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளின் ஒத்துழைப்புக் கிட்டும். சிலருக்கு ஊதிய உயர்வு கிடைக்கலாம். மாணவர்கள் ஊக்கத்துடன் செயற்படுவார்கள் முன்னேற்றமுண்டு.

### விருச்சிகம்
*(விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை)*



விருச்சிக ராசியில் பிறந்தவர்களுக்கு குடும்ப நிலை சுமாராக இருக்கும். உறவினர்களின் வருகை அதிகமாகும். அதனால் வாழ்க்கை செலவுகளும் கூடுதலாகும். மனைவி மக்களால் மன உளைச்சல் ஏற்படலாம். பணவருவாய் ஓரளவு நன்று. தொடங்கும் கருமங்கள் தாமதமடையும். பெண்பாலார் எல்லாத்துறைகளிலும் அவதானமாகவும், கண்ணியமாகவும் இருத்தல் வேண்டும். கொடுக்கல் வாங்கல்களில் அவதானம் தேவை. வர்த்தகர்களுக்கு லாபம் பெரிதாக இருக்காது. முதலீடுகள் செய்வதில் பண நெருக்கடி தோன்றும். புதிய முதலீடுகளைத் தவிர்த்தல் நன்று. உத்தியோகத்தர்களுக்கு வேலை மாற்றமும் அதிகாரிகளின் உபத்திரங்களும் ஏற்படலாம். மாணவர்களுக்கு கல்வியில் கூடுதல் முயற்சி தேவை.

### தனுசு
*(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)*



தனுராசியில் பிறந்தவர்களுக்கு வியாழ பகவானின் பார்வை இருப்பதால் யாவும் சிறப்பாகவே நடக்கும். குடும்ப வாழ்க்கையில் இனிமை ஏற்படும். உறவினர், பெரியவர்களின் உதவி கிட்டும். வீட்டில் சுபகருமங்கள் நடக்க இடமுண்டு தேகாரோக் கியம் நன்றாக இருக்கும். தொடங்கும் கருமங்கள் தாமதமின்றி நிறைவுபெறும். திருமணப் பேச்சுக்கள் விரைவில் கைகூடும் வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக நடக்கும். புதிய வாடிக்கையாளர்கள் சேருவார்கள். வங்கி உதவிகள் கிடைக்கும். தனித் தொழிலில் ஈடுபட்டுள்ளோர் கூடிய நன்மை பெறுவர். உத்தியோகத்துறையினர் முன்னேற்றமடைவார்கள். உயர்ச்சியும் உண்டு. மாணவருக்கு பரீட்சைகள் திருப்திதரும். சிலருக்கு வேலை வாய்ப்புகள் கிடைக்கலாம்.

### மகரம்
*(உத்தராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள் திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்)*



மகரராசியில் பிறந்தவர்களுக்கு வாழ்க்கை சிறப்பாக அமையும். புத்திரர்களால் முன்னேற்றமும் மகிழ்ச்சியும் ஏற்படலாகும். நண்பர்களாலும் உறவினர்களாலும் உதவி உண்டு. தேகாரோக்கியம் அதிகம் பிரச்சினை தராது. செலவுக்கேற்ற வருவாய் கிடைக்கும். வெளிநாட்டிலிருந்து வருவாய், வந்து சேரும். திருமண காரியங்கள் விரைவில் கைகூடிவரும். வர்த்தகர்களுக்கு வியாபார நடவடிக்கை சிறப்பாக அமையும். விற்பனை நன்றாக நடக்கும். வியாபாரம் சம்பந்தமாக பிரயாணங்கள் ஏற்படலாம். உத்தியோகத்துறையினருக்கு தொழில் சிறப்பாக நடக்கும். அதிகாரிகளின் ஒத்துழைப்புக் கிடைக்கும். மாணவர்கள் கல்வித்துறையில் முன்னேற்றமடைவார்கள்.

### கும்பம்
*(அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள)*



கும்பராசியில் ஜனனமானவர்களுக்கு குருவின் பார்வையால் நன்மையான பலன்கள் கிட்டும். தொழில் சிறப்பாக நடக்கும். குடும்பத்தில் அமைதி நிலவும். தொடங்கும் கருமங்கள் தங்குதடையின்றி நிறைவு பெறும். தேகாரோக்கியம் தொல்லை கொடுக்காது. அந்நிய தேசத்திலிருந்து பொருள் வரவு வரும். வருவாய்க்கேற்ற செலவு செய்வது நன்று. மங்கல கருமங்கள் கைகூடும் வாய்ப்பு உண்டு. வர்த்தகர்களுக்கு வியாபாரம் வெகு சிறப்பாக நடக்கும். நிறைந்த வருவாய் உண்டு, உத்தியோகத்தர்களும் சிறப்பாகப் பணியாற்றுவார்கள். அதிகாரிகளின் பாராட்டும் கிடைக்கும். மாணவர்களுக்கு கல்வி முன்னேற்றமுண்டு உயர் கல்வி கற்கும் பலனுண்டு.

### மீனம்
*(பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி)*



மீனராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் சந்தோஷம், குதூகலம் தென்படும். இனபந்துக்கள் கொண்டாட்டங்கள், நற்காரிய சிந்தனைகள் அதிகரிக்கும். பணக்கஷ்டம் அதிகம் இராது. தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வருவாய் கிட்டும். தேகாரோக்கியம் நன்றாக அமையும் வீட்டில் சுபநிகழ்வுகள் நடக்க இடமுண்டு. குடும்பப் பெண்கள் மனத்திருப்தியுடன் காணப்படுவார்கள். திருமணப் பேச்சுக்கள் தாமதமாகவே நடக்கும் வர்த்தகர்களுக்கு வியாபாரம் சீராக நடைபெறும். பழைய முதலீடுகள் விற்பனையாகும். பணமும் சேரும். உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளின் ஒத்துழைப்பு கிடைக்கும். தொழில் முன்னேற்றங்களும் உண்டு. மாணவர்கள் ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் முன்னேறுவார்கள். சிலருக்கு தொழில் வாய்ப்புக் கிடைக்கலாம்.

---

மருத்துவம்

# பூக்களும் அதன் மருத்துவ குணங்களும்

எஸ்.ஜெயா

***பூக்களை நாம் மென்மையானதாகவும், அழகு நிறைந்ததாகவும், இறைவனுக்குரியதாகவுமே நோக்குகிறோம். ஆனால், அவை சிறந்த மருத்துவ குணங்கொண்டவையாகவும், சுவையான உணவாகவும் காணப்படுவதோடு, கிருமி நாசினிகளாகவும் தொழிற்படுகின்றன.***

**செவ்வாத்தம் பூ**

இருதய வலி, மார்பு வலி, மார்பு நோய்கள் அகலும் இதனை கொதிநீரில் வேகவைத்து நீராட கிரந்தி அகல்வதோடு, உடல் அழகுபெறும். செவ்வரத்தம்பூவினை யூஸ்செய்து பருகலாம். அல்லது வறுவல் செய்து உணவில் சேர்த்துக்கொள்ளலாம்.

**எருக்கம் பூ**

முறைசுரம், நீர்ப்பீலிசம், சுவர்சகாரம், கழுத்து நரம்பு இசிவு இவை நீங்கும். இதற்காக இப்பூவினை நெய்யில் போட்டுக்காய்ச்சி மருத்துவ ஆலோசனையுடன் வேண்டிய அளவில் பாவிக்கலாம்.

**குங்குமப் பூ**

கபாதிக்கம், பயித்தியம், காது மந்தம், நீர் ஏற்றம், மண்டை வலி, நாவறட்சி, கண்ணிற்படரும் பூ, சலபீநிசம் இவைகளை நீக்கும் மருத்துவ குணங்களைக் கொண்டது.

**நந்தியாவட்டைப் பூ**

நேத்திரகாசம் சிரஸ்தாபரோகம், இவைகளை விலக்கும். இதனை குளிர்ந்த நீரில் இட்டு அல்லது முலைப்பாலில் தொட்டு கண்ணில் ஒத்தடம் கொடுக்க கண்எரிச்சல், கண் நோய் என்பன நீங்கும்.

**மல்லிகைப் பூ**

கோழை, கண்மயக்கம், தேக உஷ்ணம் இவை நீக்கும். லட்சுமி கடாட்சம் உண்டு. இதன வாசனை உள ரீதியான ஒரு உடல் பூரிப்பினை உண்டாக்குகிறது. ஆனால், ஆய்வாளர்கள் இப்பூவினை உஷ்ணம் என்பர்.

**மாதுளம் பூ**

மாதுளம்பூ சாற்றில் அதிமதுரத்தை அரைத்து சுண்டைக் காயளவு பாலில் கலந்து சாப்பிட்டால் தேக உஷ்ணம்போகும். உடல் குளிர்ச்சி ஏற்படும். அறுகம்புல்சாறு, மாதுளம் பூச்சாறு சேர்த்துக்கொடுக்க இரத்தம் வரும் வியாதிகள் நீங்கும்.

**வாழைப் பூ**

இருமல், கை, கால் எரிச்சல்களை நீக்கும். குடலில் சிக்கிய மயிர்கள் கல், விசம் இவைகளை விடுவிக்கும் தன்மை கொண்டது. இதனை வறுவல் செய்தோ அல்லது கறி வைத்தோ அல்லது வடகம் செய்தோ சுவையாக உண்ணலாம்.

**வேப்பம் பூ**

நாட்சென்ற வேப்பம் பூவுக்கு சன்னி, நீடித்தவாதம் ஏப்பம், மலக்கிருமி இவைகள் நீங்கும் பித்தம் சாந்தப்படுத்தும். இது பித்தாயசமாக கல்லீரலின் தொழிலைச் சரிப்படுத்தி மஞ்சள் நிறமான மலத்தை போக்கும். இதனை வேப்பம்பூ வடகமாகச் செய்து உணவுடன் சேர்த்துக்கொள்ளலாம்.

**முருங்கைப் பூ**

கபம் நீங்கும், குடல் பலம் உண்டு. வயிற்றினுள் வாயுவை நீக்கும். இதனை வறை செய்தோ அல்லது கறிசமைத்தோ உண்ணலாம். இப்பூவின் சாறு கண்சம்பந்தமான நோய்களுக்கு மருந்தாகப் பயன்படுகின்றது. இதில் விற்றமின்கள் உண்டு.

**தும்பைப் பூ**

இதன் மலர் சுத்த வெள்ளை நிறமானது. என்பதுடன் மிகவும் மென்மையானது விசக்கடிக்கு மிக்க பயனுள்ளது. குப்பைமேனிக்கு நிகரானது. உடல், எலும்பு, தசை என்பன உறுதியடையும்.

---

## ஒரு வாசகரின் கருத்து
# தோல்விகண்ட வாஜ்பாய் அரசு

ஒரு மதசார்பு அரசு தோல்வி கண்டதாகப் பேசிக்கொள்கிறோம். இது தவறு தம் அரசியல் கட்சிகள் ஆட்சிப்பீடத்தில் அமர பலவித தந்திரோபாயங்களையுக் கையாளுவர். அவைகளில் மதமும் ஒன்று. மதத்தை மதிப்பவர்கள் மனிதாபிமானத்தை நேசிப்பவர்களாய் இருப்பார்கள். வாஜ்பாய் ஓர் உண்மையான இந்துவானால் இதுபோல் மதத்தை வைத்துக் கொண்டு அரசியல் நடத்தும் சிங்களவரோடு கைகோர்த்து, இந்துக்கள் பெரும்பான்மையாக உள்ள தமிழருக்கு துன்பம்தரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுவாரா?

இனி, மதசார்பின்மைக் கட்சிகள் வெற்றி வாகைசூடியது பற்றிப் பேசப்படுகிறது. இதுவும் தவறுதான் வென்ற கட்சிகளின் தலைவர்கள் மிகவும் நாணயமுள்ள அரசியல்வாதிகள் அல்லர். அவர்கள் அரசு கட்டில் ஏற மதச்சார்பின்மை என்ற போர்வையைத் தேர்ந்தெடுத்தார்கள். அவ்வளவே.

தற்போது தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதமர் ஓர் சீக்கியர். சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவர். இலச்சியப் பிடிப்புள்ள ஒருவர் எனக் கூறப்படுகின்றது. இது சற்று ஆறுதல் அளிப்பதாகும்.

கருணாநிதி முதலியோர் சந்தர்ப்பவாதிகள். ஊழல் பேர்வழிகளும் கூட. ஆனால், கம்யூனிஸ்டுகளை நம்பலாம். அடிமட்ட தொழிலாளிவர்க்க அனுதாபிகளான இவர்கள் அல்லலுறும் இலங்கைத் தமிழர்கள் பால் பாராமுகம் காட்டுவது ஒரு பொதுவுடமைக் கட்சிக்கு ஏற்றதல்ல என்பதை ஏன் உணராது இருக்கிறார்கள்? இது விந்தையல்லவா?

குருவி

பொதுசன நூலகம்

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P.. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை*

திருக்குறள்

# நமது நோக்கு

## இடைக்கால நிர்வாகமும், இறுதித் தீர்வும்

சமாதானப் பேச்சுக்களை முன்னெடுப்பதில் உள்ள சிக்கல்கள் மற்றும் பிணக்கப்பாடுகள் குறித்து அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே இணக்கப்பாடுகளை ஏற்படுத்தும் நோர்வே அனுசரணையாளர்களின் பிரயத்தனங்கள் தொடர்ந்த வண்ணம உள்ளன.

கருத்துப் பரிமாற்றங்கள் மூலம் முரண்பாடான விடயங்களில் சம்பந்தப்பட்ட இரு தரப்பினருக்கும் இடையே கருத்தொருமைப்பாட்டை ஏற்படுத்துவதென்பது சமாதான முன்னெடுப்புக்கள துரிதமாவதற்கு மிகமிக அவசியமானதென்பதும், அதில் வெற்றியடையாமல் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதில் எவ்வித அர்த்தமும் இல்லை என்பதும் அனைவரும் அறிந்த விடயமே.

தற்போது மீண்டும் ஆரம்பிக்கவுள்ள பேச்சுவார்த்தையானது புதிய தளத்தில், புதிய அணுகுமுறைகளில், முதலில் இருந்தே ஆரம்பிக்கவேண்டிய அவசியமே இல்லை என்பது முதலில் அரச தரப்பினர் புரிந்துகொள்ளவேண்டும். ஏற்கனவே முன்னைய ஐக்கிய தேசிய முன்னணி அரசால் ஆரம்பிக்கப்பட்ட பேச்சுவார்த்தைகளுக்கும் இதே நோர்வே அரசுதான் ஏற்பாட்டாளராகப் பணியாற்றியது.

இதே சர்வதேசம் தான் அதற்கான பின்புல ஆதரவை வழங்கியது. இதே சிங்கள தலைமைகள் இப்பேச்சுவார்த்தையில் அரசின் சார்பில் கலந்தும் கொண்டன.

இந்த இடத்தில் ஒன்றைக் குறிப்பிட்டாகவேண்டும். அதாவது, தமிழர் தரப்பானது, எப்போதும் சிங்கள ஆட்சியாளர் தரப்புடனேயே பேச்சுக்களை மேற்கொண்டு வந்துள்ளதேயன்றி, ஆட்சியில இருக்கும் தனிப்பட்ட சிங்களக் கட்சிகளுடன் அல்ல என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும்.

ஆட்சியில் இருப்பது ஐ.தே.கட்சியோ, ஐ.தே.முன்னணியோ, சி.சு.கட்சியோ, பொ.ஐ.முன்னணியோ அல்லது ஐ.ம.சு, முன்னணியோ எதுவானாலும் அவர்களை தனிப்பட்ட வேறுவேறு கொள்கைகளை உடைய கட்சிகளாக பார்க்காது சிங்கள அரச தரப்பினராகவே கருதித்தான் இதுவரை காலமும் சமாதானப் பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளன.

எனவே, இப்போதைய அரசில் ஐ.ம.சு.முன்னணி ஆட்சிப்பீடத்தில அமர்ந்திருந்தாலும் கடந்த அரசில் ஐ.தே. முன்னணி முன்னெடுத்துவந்த பேச்சுக்களை தொடர்வதென்பது தமக்கு சாத்தியமில்லை என அவர்கள் கூறுவது எந்தவகையிலும் ஏற்றுக்கொள்ளவே முடியாது. அது நியாயமுமில்லை.

ஆகவே, கடந்த ஆட்சிக்காலத்தில் எந்த அடிப்படையில் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டதோ... அந்த வகையிலேயே தொடர்ந்தும் முன்னெடுக்கவேண்டும் என்பதும், எந்த இடத்தில் அது தேக்கநிலையை அடைந்ததோ அந்த இடத்திலிருந்து அது மீண்டும் தொடரப்படவேண்டுமென்பதும் அவசியமேயாகும். இப்போது இருதரப்பினரதும் முக்கிய பொறுப்பு தேக்க நிலைக்கான தடைகளை ஆராய்ந்து, அவற்றை நீக்கி ஒரு சுமுக நிலையை உருவாக்குவதேயாகும். இதனை விடுத்து வேறு புதிய நிபந்தனைகளை அரசு முன்வைப்பதும், அதனை வலியுறுத்த முனைவதும், ஏற்கனவே தேக்க நிலைக்குள் சிக்கியுள்ள சமாதான நகர்வுகளுக்கு மேலும் புதிய தடைகளைப் போடுவதாகவே கருதப்படும்.

இது உண்மையில் சமாதான முயற்சிகள் மீதான அரசின் அக்கறை போலியானதும், விசுவாசமற்றதுமான ஒன்று என்ற மக்களின் கருத்து நிலைப்பாட்டை ஊர்ஜிதப்படுத்தவே வழிவகுக்கும்.

உண்மையில் இந்த நாட்டில் விரைவானதும், நீதியானதும், உறுதியானதுமான ஓர் அரசியல் தீர்வை ஏற்படுத்த, பல தசாப்தகால இனப்பிரச்சினைக்கு ஒரு சமாதான நிலையை உருவாக்க அரசு விசுவாசமான முறையில் திடசங்கற்பம் பூண்டிருக்குமேயானால், இப்போது அதை முன்னெடுக்கத் தடையாக உள்ள சிக்கல்களை விடுப்பதிலேயே தடைகளைத் தகர்ப்பதிலேயே ஆர்வமாகச் செயற்பட வேண்டும்.

ஆனால், அரசின் நிலைப்பாட்டில் இந்த வகையிலான சிந்தனைப்போக்கே தென்படவில்லை. மாறாக மீண்டும் ஒரு இழுத்தடிப்பு நடவடிக்கையைத் தொடர்ந்து தமிழ் மக்களையும், சர்வதேசத்தையும் ஏமாற்றும் உள்நோக்கத்தின் வெளிப்பாடாகவே- அரசின் புதிய நிலைப்பாட்டை உணரமுடிகிறது.

இது சமாதான முன்னெடுப்புகள் வெற்றிகரமாக அமைய ஒரு ஆரோக்கியமான தளமாக அமையப்போவது கிடையாது.

இடைக்கால நிர்வாக அதிகாரசபை தொடர்பான விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு நியாயமானது என்பதில் ஐயமில்லை. ஆனால், அது குறித்து பேசிமுடிவெடுக்கத் தயங்கும் அரசு - இறுதித் தீர்வு குறித்தும் ஏககாலத்தில் பேச வலியுறுத்துகிறது.

இடைக்கால நிர்வாக அதிகாரசபை என்பது தமிழ் மக்களின் அன்றாட வாழ்க்கை மேம்பாட்டுடன் சம்பந்தப்பட்டது. மக்களில் இயல்பு வாழ்க்கையை மீட்டெடுக்க உத்தரவாதமாக இடைக்கால நிர்வாகம் என்ற தற்காலிக சமூக மேம்பாட்டுக் கட்டமைப்பை உருவாக்கவே பின்னடிக்கும் அரசு - ஏக காலத்தில் இறுதித் தீர்வு குறித்துப் பேச வற்புறுத்துவது விந்தையேயாகும்.

அரசின் இந்த நிலைப்பாடு காலத்தை இழுத்தடிக்கும் தந்திரோபாயத்தினை அடிப்படையாகக் கொண்டதே என்ற விடுதலைப் புலிகளின் கருத்து நிலைப்பாடு சந்தேகத்திற்கிடமற்ற உண்மையேயாகும்.

இயல்பு வாழ்வை தமிழ் மக்கள் மீட்டெடுக்க மட்டுமே இடைக்கால நிர்வாகம் உதவும். இந்த நம்பிக்கை உறுதியானால் மட்டுமே இறுதித்தீர்வு பற்றிப் பேசுவதில் ஆர்வமும், நம்பிக்கையும் தமிழ் மக்களுக்கு உருவாகும் என்பதை அரசு புரிந்துகொண்டு சமாதானத்தை சாத்தியமாக்கும், உறுதிப்படுத்தும், செயற்பாடுகளில் அக்கறை காட்ட வேண்டியதே இப்போதைய தேவையாகும்.

# நாடும் நடப்பும்

*செய்தி:* ஜாதிக ஹெல உறுமயவின் முழுப் பொறுப்பும் பௌத்த குருமாரிடம் கையளிப்பு....




# சாதனைமிக்க வரலாற்றை வெளிப்படுத்தும் பொறுப்பு எதிர்கால சந்ததியிடமே உள்ளது!

## துணைவேந்தர் எஸ்.மோகனதாஸ் தெரிவிப்பு

தமிழ்மக்களின் சாதனைமிக்க வரலாற்றை வெளிப்படுத்தவேண்டிய பாரிய பொறுப்பு எதிர்காலச் சந்ததியிடம் உள்ளது என யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ் தெரிவித்தார்.

யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத்துறையினரால் புவியியல்துறை மண்டபத்தில் வைத்து கலாசுரபி இதழ் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது. அந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது -

தமிழர்களின் வாழ்வும், வரலாறும் மகத்தானது அவை சிங்கள வரலாற்றால் மூடிமறைக்கப்பட்டிருக்கின்றது. அவற்றை ஆய்வுகள் மூலம் வெளிப்படுத்தவேண்டிய பாரிய பொறுப்பு வரலாற்றுத்துறையினரைச் சாரும்.

வரலாறு இன்று கட்டாய பாடமாக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. சிறு வயதுமுதல் ·முரண்பட்ட வரலாற்றுண்மைகள் விதைக்கப்படுவது மாற்றியமைக்கப்படுவதுடன், தமிழர் பற்றிய வரலாற்றிற்கும் முக்கிய இடமளிக்கப்படுதல் வேண்டும். மறைந்து, புதைந்து கிடக்கும் தமிழர் வரலாறுகள் பூரணமாக வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். வரலாறு கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படுவதுடன், அவர்களுக்கு ஆய்வு ரீதியான சிந்தனைகளை விருததிசெய்வதனூடாக இந்தப்பணியை மேன்மைபெறசெய்யமுடியும்.

வரலாற்றுக்கழகம் என்பது தனியே கலாசுரபியை மட்டும் வெளியிடவில்லை பல்வேறு சமூக, பண்பாட்டு அம்சங்களுடனும் ஒன்றிய வகையில் தனது கடமைகளை மேற்கொண்டுவருகிறது. இத்தகைய பணிகள் தொடர வேண்டும். தொடர்ந்தும் யாழ்.பல்கலைக்கழகத்தில் வரலாற்றுக்கழகம் தனக்கென ஓர் தனித்துவமான இடத்தில் விளங்கவேண்டும் எனவும் அவர் அங்கு தெரிவித்தார்.

தொடக்கவுரையை நிகழ்த்திய பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் - தமிழர்களின் வரலாறு சிங்களவர்களின் வரலாற்றுக்கு என்றுமே சளைத்ததல்ல அதனை வெளிப்படுத்திய பலர் எம்மத்தியில் உள்ளனர்.

தமிழர்கள் பூர்வீகமாக இந்த நாட்டில் வாழ்ந்து வருவதை எவரும் மறுக்கமடியாது அதற்கான போதிய சான்றுகளை நாம் வைத்திருக்கின்றோம்.

இக்கழகத்தால் வெளியிடப்படும் புத்தகத்திலும், தமிழர் பற்றிய பல கருத்துக்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. எமது வரலாற்றைப் பாதுகாப்பதில் இக்கழகமும் அரும்பங்காற்ற வேண்டும் என்றார். (ப)

## அத்தியாவசிய பொருட்களின் பட்டியலில் கோதுமைமாவும் சேர்க்கப்பட்டுள்ளது!

இலங்கையின் பிரதான உணவுப்பொருளான கோதுமை மா - அத்தியாவசிய பொருட்களின் பட்டியலில் சேர்க்கபபடடுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. நேற்று இரவு முதல் அத்தியாவசிய பொருட்கள் சட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளதாக அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே தெரிவித்தார்.

கோதுமா மாவிற்கான மானியத்தை அரசாங்கம் வழங்காமையை அடுத்து கோதுமை மாவின் விலையை அதிகரிக்கவுள்ளதாக பிறீமா நிறுவனம் அறிவித்துள்ளது.

இதனையடுத்து நுகர்வோரைப் பாதுகாக்கும் வகையில் அதனை அத்தியாவசிய பொருளாகப் பிரகடனப்படுத்தியுள்ளதாகவும் -

இதனையடுத்து தனியார் எவரும் மாவினை இறக்குமதி செய்ய முன்வந்தால் அதற்கு அனுமதிவழங்கத் தயாராக இருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# சீருடை விநியோகத்தின்போது மேலதிக கொடுப்பனவு வழங்குமாறு கல்விசார் ஊழியர் சங்கம் கோருகிறது

பாடசாலை மாணவர்களுக்கு இலவச சீருடை விநியோகித்தல் கடமைகளுக்கு அதிபர், ஆசிரியர்களுக்கு மேலதிகக் கொடுப்பனவுகள் வழங்கப்படவேண்டும் என்று கல்விசார் ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

பாடசாலை மாணவர்களுக்கான சீருடை விநியோக நடவடிக்கைகள் மீண்டும் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு பொறுப்பிக்கப்பட்டமை குறித்து கல்விசார் ஊழியர் சங்கம் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

சீருடை விநியோகம் பிரதேச செயலகங்களினூடாக மாணவர்களுக்கு வழங்கப்பட்டபோது பிரதேச செயலக அலுவலர்களுக்கு மேலதிக கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன. இந்த நடைமுறையின்படி ஆசிரியர்களுக்கும், அதிபர்களுக்கும் சீருடை விநியோக நடவடிக்கைகளின் போது மேலதிக கொடுப்பனவுகள் வழங்கப்படவேண்டும்.

சீருடை விநியோக நடவடிக்கைகளை அதிபர்கள், ஆசிரியர்கள் சரியான முறையில் நிறைவேற்றவில்லை என்று குற்றம் சுமத்தியே இந்த நடவடிக்கை பிரதேச செயலாளர்களிடம் முன்னர் ஒப்படக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (122)

## புலிகளின் அலுவலகத்தில் பொருத்தப்பட்டிருந்த வெடிகுண்டு இராணுவத்தினரால் மீட்பு!

வாழைச்சேனையில் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் அலுவலகத்தில் பொருத்தப்பட்டிருந்த வெடிகுண்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளது.

வாழைச்சேனையில் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறை அலுவலகம் கருணாவின் பிரச்சினையயடுத்து நீண்டநாட்களாக மூடப்பட்டிருந்தது. எனினும், கடந்தவாரம்முதல் அது இயங்கத்தொடங்கியிருந்தது.

இந்த அலுவலகத்திலிருந்தே நேற்றுமுன்தினம் காலை குண்டொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது குறித்து இராணுவத்தினருக்கு தகவல் கொடுக்கப்பட்டதையடுத்து, குண்டு இராணுவத்தினரால் செயலிழக்கச் செய்யப்பட்டுள்ளது. இதுகுறித்து விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (01)

## இணுவில் கோவில் வீதி புனரமைப்புக்கு 5 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு!

வலி.தெற்கு பிரதேச சபையின் பிரதேச அபிவிருத்தி மூலதன நன்கொடை நிதியிலிருந்து இணுவில் மத்திய கல்லூரியின் அருகிலுள்ள கோவில் வீதி விரைவில் புனரமைப்புச்செய்யப்படவுள்ளது. இதற்கென் 5 லட்சம் ரூபாவும் விசேட மூலதன நன்கொடை அபிவிருத்தி நிதியின் கீழ் ஏழாலை ஏழுகோயில் வீதி புனரமைப்புக்கு 3 லட்சத்து எழுபதாயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஏழாலை ஸ்ரீ முருகன் கொலனி வீதி மின விஸ்தரிப்புக்கான நிதி கிடைத்துள்ளதாகவும், மின்சார சபையின் ஒத்துழைப்புடன் விரைவில் பணிகள் மேற்கொள்ளபபடவிருப்பதாகவும் வலி.தெற்கு பிரதேச சபையின சுன்னாகம் உப அலுவலக அதிகாரி தெரிவித்தார். (101)

அயலக அரசியல் நோக்கு

மெல்போர்னிலிருந்து சபேசன்





# புதிய பாதையில் பழைய தடை...

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது விதித்திருந்த தடையை, இந்திய அரசு மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நடித்துள்ளது. கடந்த 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமையன்று தமிழக அரசு பிறப்பித்துள்ள இந்த உத்தரவை அடுத்து இந்தியாவின் புதிய அரசு, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மீது கடும்போக்கை கடைப்பிடிக்க உள்ளது- என்ற கருத்துப்பட, கட்டுரைகள் எழுதப்படுவதையும், அதையொட்டி அரசியல் ஆய்வுகளும், பரப்புரைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதையும், நாம் இப்போது காணக்கூடியதாக உள்ளது.

காங்கிரஸ் கட்சிக் கூட்டணியின் தலைமையில், புதிய அரசு அமைக்கப்பட்டிருந்த போதிலும், இந்தப் புதிய அரசுக்கும், இத் தடைச்சட்ட நீடிப்பிற்கும் சம்பந்தம் இல்லை' என்பதே உண்மையாகும். சற்று ஊன்றிக் கவனித்தால் சில விடயங்கள் புலனாகும்.

சில கட்டங்களாகப் பிரிக்கப்பட்டு, நடாத்தப்பட்ட இந்தியப் பொதுத் தேர்தலின் கடைசிக் கட்ட வாக்களிப்பு, மே மாதம் 10 ஆம் திகதியன்று நடைபெற்றது. இப்பொதுத் தேர்தலின் தீர்க்கமான முடிவுகள் 13 ஆம் திகதியன்று வெளிவந்துவிட்டன. சோனியா காந்தியின் தலைமையிலான காங்கிரஸ் கட்சிக் கூட்டணியானது, எதிர்பாராத வெற்றியைப் பெற்று, ஆட்சியை அமைக்கக்கூடிய நிலை மே மாதம் 13 ஆம் திகதியன்று தெளிவாக உருவாகியது.

அதற்கு அடுத்த நாள், அதாவது மே மாதம் 14 ஆம் திகதியன்று - இந்திய உள்துறை அமைச்சு, ஓர் ஆணையொன்றைப் பிறப்பித்தது. சட்டவிரோத நடவடிக்கைகள் தடைச் சட்டத்தின் கீழ், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீதான தடையை மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு, முன்னைய மத்திய அரசு நீடிக்கின்றது. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு சட்டவிரோத இயக்கம் என்றும் 'இந்திய நாட்டின் இறையாண்மைக்கும், ஒற்றுமைப்பாட்டுக்கும், விடுதலைப் புலிகளின் வன்முறைச் செயற்பாடுகள் அச்சுறுத்தலாக இருக்கும்' என்றும் இந்த தடை நீடிப்புக்கு இந்திய உள்துறை அமைச்சு காரணம் காட்டியிருந்தது.

இந்த ஆணையை இந்திய உள்துறை அமைச்சு தமிழ்நாட்டு மாநில அரசுக்கு அனுபபிய தினம் மே மாதம் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை.ஆனால் இந்தத்தடை உத்தரவை. தமிழ்நாடு மாநில அரசு தன்னுடைய சிறப்பு அரச வர்த்தமானியூடாக வெளியிட்ட தினம் மே மாதம் 21ஆம் திகதி வெள்ளிக்கிழமையாகும்.

அதாவது, இந்தியாவின் முன்னைய மத்திய அரசு பிறப்பித்த இந்த தடையுத்தரவை, சரியாக ஒருவாரம் கழித்து, ஜெயலலிதாவின் மாநில அரசு, வர்த்தமானியூடாகப் பிரகடனப் படுத்தியுள்ளது. அந்த வர்த்தமானிப் பிரகடனத்தைக் கூர்ந்து கவனித்தால், இந்தியாவின் முன்னைய அரசு இந்தத் தடை உத்தரவைப் பிறப்பித்த தினம் மே மாதம் 14 ஆம் திகதி என்று இருப்பதைக் காணமுடியும். ஜெயலலிதா அம்மையார், சரியாக ஒரு வாரம் காத்திருந்து மே மாதம் 21 ஆம் திகதி அன்று, இத்தடையாணையைப் பிரகடனப்படுத்திய தன் காரணங்கள் யாதோ?

சிலவற்றை நாம் எளிதாகவே ஊகிக்க முடிகின்றது. மே மாதம் 21 ஆம் திகதி ராஜீவ் காந்தியின் நினைவு தினமாகும்! சோனியா காந்தியின் தலைமையில் காங்கிரஸ் கூட்டணி வெற்றி பெற்று, அரசு அமைக்கும் இந்த வேளையில், வை.கோபாலசாமியின் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம், டாக்டர் ராமதாஸின் பாட்டாளி மக்கள் கட்சி போன்ற விடுதலைப் புலிகள் ஆதரவுக் கட்சிகள் காங்கிரஸ் கூட்டணியில் இடம் பெற்றுள்ள இந்த வேளையில், இலங்கைப் பிரச்சினை குறித்து, இந்தியாவின் புதிய அரசு உத்தியோகபூர்வமாக எதுவும் சொல்வதற்கு முன்னால், சோனியா காந்திக்கு ஒரு தர்மசங்கட நிலையை உருவாக்கவேண்டும் என்ற எண்ணத்தில், தமிழக முதல்வர் ஜெயலலிதா மேற்கொண்ட செயற்பாடுதான் இது.

ஏற்கனவே, தன்னுடைய கீழ்த்தரமான அரசியல் பிரசாரங்கள் ஊடாக, சோனியா காந்தியைக் கேவலமாக விமர்சித்து வந்த ஜெயலலிதா இம்முறை ஒரு அரசியல் பின்னடைவை புதிய அரசுக்கு ஏற்படுத்த முனைந்திருக்கின்றார்.

இந்த முயற்சிகளின் எதிர்வினைகள் மீண்டும் ஜெயலலிதாவுக்கெதிராகவே வந்துமுடியும் என்பதை ஏனோ பாவம், அவர் உணர முடியாதவராகவே இருக்கின்றார். இந்தியாவில் அரசியல் ரீதியாகவும், சட்டரீதியாகவும் பல மாற்றங்கள் ஏற்படப்போகின்றன என்பதே எம்முடைய பார்வையாக இருக்கின்றது.

ஆனால், இத்தடை நீடிப்பைக் காரணமாக வைத்து தம்முடைய தமிழ் விரோதக் கருத்துக்களை விசமப் பிரசாரம் செய்பவர்களின் உள்நோக்கம் குறித்து, நாம் விழிப்பாக இருக்க வேண்டியது அவசியமானதாகும்!.

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான இந்தத் தடை நீடிப்பு துரதிர்ஷ்டவசமான ஒன்றுதான்! அதிலும் சந்தேகமில்லை. ஆயி னும் இத்தடை நீடிப்புக்கான காரணங்களை இன்றைய காலகட்டத்தில் வைத்து நாம் ஆராய்ந்தால், அவை வலுவில்லாத, பொருத்தமில்லாத காரணங்களாக இருப்பதையே நாம் காண முடிகின்றது.

சட்டவிரோத நடவடிக்கைகள் தடைச்சட்டத்தின் கீழ், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான தடையை, மேலும் இரண்டு ஆண்டுகள் நீடித்தமைக்கு இவ்வர்த்தமானியில் கூறப்பட்ட காரணங்களில் முக்கியமான ஒன்றாக கீழ்வரும் காரணம் கூறப்பட்டுள்ளது.

'தனது வன்முறை மற்றும் இந்திய எதிர்ப்பு நிலைப்பாட்டினை விடுதலைப் புலிகள் கைவிடாதபட்சத்தில் அவர்களது நடவடிக்கைகள் காரணமாக, இந்தியாவின் இறையாண்மைக்கும், ஒருமைப்பாட்டுக்கும் ஆபத்து ஏற்படக்கூடும்' - என்று, இத்தடை நீடிப்பின் முக்கிய காரணம் தெரிவிக்கின்றது. இது சரியான காரணமா? இந்தக்காரணத்தில் ஏதேனும் உண்மை இருக்கின்றதா?

**இந்தியாவுடனான் உளப்பூர்வமான, ஆத்மார்த்தமான நட்புறவை நாடி, தன்னுடைய உள்ளக் கிடக்கையை, விருப்பத்தை, வேண்டுகோளை தமிழீழத் தேசியத் தலைமை தொடர்ந்தும் தெரிவித்தே வந்துள்ளது. தன்மீது இந்திய அரசியல்-இராணுவ அழுத்தங்கள் இருந்த நேரத்திலும் சரி, அத்தகைய அழுத்தங்களை வெற்றிகொண்ட வேளையிலும் சரி. சிங்கள அரசுகளுடனான போரில், இராணுவ வெற்றிகளையும், அரசியல் வெற்றிகளையும் பெற்றிட்ட போதும் சரி, தமிழீழத் தேசியத் தலைமை, தன்னுடைய உள்ளக் கிடக்கையை, இந்திய தேசத்தின் மீதான தன்னுடைய நட்பு ணர்வை வெளிப்படுத்தியே வந்துள்ளது. அந்தவகையில் வரலாற்றிலிருந்து, சில சம்பவங்களைச் சுட்டிக் காட்டுவது இவ்வேளையில் பொருத்தமாக இருக்கும்.**

கடந்த இரண்டு ஆண்டு காலத்திற்கும் மேலாக, யுத்த நிறுத்தத்தை மேற்கொண்டு, அரசோடு சமாதானப் பேச்சுவார்த்தைகளை தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொண்டு வந்துள்ளார்கள். அரசு இந்த ஆண்டு மாறிய போதும் கூட, சந்திரிகா புதிய அரசோடு, சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடாத்தி, பேச்சுவார்த்தைகள் ஊடாக தீர்வு ஒன்றினை அடைவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் முயன்று வருவதையும் நாம் அறிவோம். ஆகவே, முன்னாள் இந்திய மத்திய அரசு குறிப்பிட்டுள்ள வன்முறை நிலைப்பாடு என்ற சொற்றொடர் உண்மையற்றதும், பொருத்தமற்றதுமாகும்.

அடுத்து இந்திய எதிர்ப்பு நிலைப்பாட்டினை, விடுதலைப் புலிகள் கொண்டுள்ளார்கள் என்று, தடை நீடிப்புக்கான காரணத்தை முன்னைய இந்திய மத்திய அரசு தெரிவித்துள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகள், இந்திய எதிர்ப்பு நிலைப்பாட்டினை கொண்டிருக்கிறார்களா? - என்ற விடயம் குறித்துச் சிறிது தர்க்கிப்போம்.

இவ்விடயம் குறித்து நாம் முன்னரும் பல தடவைகள் தர்க்கித்து வந்துள்ள போதும் கூட, இன்றைய அரசியல் மாற்றங்களுக்கு மத்தியில், மீண்டும் சில அடிப்படைக் கருத்துக்களை வலியுறுத்துவதில் தவறில்லை என்றே எண்ணுகிறோம்.

இந்தியாவுடனான உளப்பூர்வமான, ஆத்மார்த்தமான நட்புறவை நாடி, தன்னுடைய உள்ளக் கிடக்கையை, விருப்பத்தை, வேண்டுகோளை தமிழீழத் தேசியத் தலைமை தொடர்ந்தும் தெரிவித்தே வந்துள்ளது. தன் மீது இந்திய அரசியல்-இராணுவ அழுத்தங்கள் இருந்த நேரத்திலும் சரி, அத்தகைய அழுத்தங்களை வெற்றி கொண்ட வேளையிலும் சரி. சிங்கள அரசுகளுடனான போரில், இராணுவ வெற்றிகளையும், அரசியல் வெற்றிகளையும் பெற்றிட்ட போதும் சரி, தமிழீழத் தேசியத் தலைமை, தன்னுடைய உள்ளக் கிடக்கையை, இந்திய தேசத்தின் மீதான தன்னுடைய நட்புணர்வை வெளிப்படுத்தியே வந்துள்ளது. வரலாற்றிலிருந்து, சில சம்பவங்களைச் சுட்டிக் காட்டுவது இவ்வேளையில் பொருத்தமாக இருக்கும்.

இந்திய-இலங்கை ஒப்பந்தக் காலகட்டத்தின் போது - அதாவது சுமார் பதினேழு ஆண்டுகளுக்கு முன்பு - தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் தன்னுடைய சுதுமலைப் பிரகடனப் பேச்சின் போதும், இந்தியாவுடனான நட்புறவை வலியுறுத்திப் பேசி இருந்ததை இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டுக் காட்ட விழைகின்றோம். 'இந்திய-இலங்கை ஒப்பந்தமானது தமிழ் மக்களுக்கு எந்த விதமான உரிமையையும் பெற்றுத் தராது' - என்பதை விளக்கிய தேசியத் தலைவர் அதே மேடையிலேயே, இந்தியாவின் மீதான தன்னுடைய நம்பிக்கையையும், நட்புணர்வையும், தெளிவு படுத்தியிருந்தார். 'நாம் இந்தியாவை நேசிக்கின்றோம். இந்திய மக்களை நேசிக்கின்றோம். நாம் இந்தியாவிற்கு எதிரானவர்கள் அல்ல' - என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை அன்றே தலைவர் தெளிவாக்கியிருந்தார்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு மிகவும் பரபரப்பான சூழ்நிலையில், உலகநாடுகள் அனைத்தினது கவனத்தையும் ஈர்த்து, நடைபெற்ற. சர்வதேச ஊடகவியலாளர் மாநாட்டின் போதும் தலைவர் பிரபாகரன் இந்தியாவுடனான நட்புறவு குறித்து மீண்டும் வலியுறுத்திப் பேசி இருந்தார்.

1987 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் கொண்டிருந்த இராணுவ-அரசியல் பலம் வேறு, 2002 ஆம் ஆண்டு புலிகள் கொண்டிருந்த இராணுவ-அரசியல் பலம்வேறு.! இந்தப் பதினைந்து ஆண்டு காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் இராணுவ-அரசியல் வளர்ச்சி மிகப்பெரிய பரிமாணத்தை எட்டிவிட்டது. ஆயினும், இந்த இரண்டு வித்தியாசமான காலப்பகுதியிலும் அதாவது 1987லும், 2002 இலும் இந்தியாவுடனான நட்புறவு குறித்து ஒரே கருத்தைத்தான் தமிழீழ தேசியத் தலைமை கொண்டிருந்தது.

பின்னர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசுடனான பேச்சுவார்த்தைகளின் போதும், இந்தியாவின் அனுசரணையையும், நட்பையும், விடுதலைப் புலிகள் நாடியதையும் நாம் சுட்டிக்காட்ட விழைகின்றோம். ஆனால் துரதிர்ஷ்டவசமாக முன்னைய இந்திய அரசு விடுதலைப் புலிகளின் நேசக்கரத்தை ஏற்றுக் கொள்ளவில்லை.





தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தொடர்ந்தும். இந்தியாவுடனான நட்புறவை நாடி, தமது எண்ணத்தை வெளிப்படுத்தியே வந்துள்ளார்கள். தமிழீழ விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம், அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், மூத்த உறுப்பினர் வே.பாலகுமாரன் போன்றோர். இத்தகைய கருத்துக்களை மீண்டும் - மீண்டும் தெரிவித்தே வந்துள்ளார்கள்.

இந்திய அமைதிப்படையினருடனான போர் குறித்து - நாம் விருப்பு-வெறுப்பின்றி சிந்தித்துப் பார்த்தால், அதில் ஓர் அடிப்படை நியாயம் பலமாக இருப்பதை புரிந்து கொள்ளமுடியும். சுருக்கமாகக் கூறினால் ஈழத் தமிழர்கள் குறித்த - ஆனால் ஈழத் தமிழர்கள் சம்பந்தப்படாத 'இலங்கை-இந்திய' ஒப்பந்தம் ஒன்றை ஈழத்தமிழர்கள் மீது திணிக்க முனைந்த போது, தனது உரிமையையும், சுதந்திரத்தையும் காப்பாற்ற ஈழத்தமிழினம் போராடியது. இதேபோல் வேறு ஒரு வல்லரசு இந்தியா சம்பந்தப்படாத ஒப்பந்தம் ஒன்றை இந்தியா மீது திணிக்க முனைந்திருந்தால், இந்தியா தன்னுடைய உரிமையையும், சுதந்திரத்தையும் பாதுகாத்துக் கொள்வதற்காகப் போராடியிருக்கும். இத ல் இருக்கும் அடிப்படை நியாயத்தை நாம் புரிந்து கொள்வது கடினமான ஒன்றல்ல.

ஆகவே இந்திய எதிர்ப்பு நிலைப்பாட்டைத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் கொண்டிருக்கின்றது என்பதை தடை நீடிப்புக்கான காரணமாக. இந்திய முன்னாள் மத்திய அரசு கூறியிருப்பது மிகத் தவறானதாகும்.

அடுத்து 'விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் காரணமாக இந்தியாவின் ஒருமைப்பாட்டிற்கும், இறையாண்மைக்கும் ஆபத்து ஏற்படக்கூடும்' என்ற குற்றச்சாட்டு, இத்தடை நீடிப்பின் ஊடே முன்வைக்கப்பட்டுள்ளது. இதுவும் மிகத்தவறான கருத்தாகும்.

இந்தியாவின் பிராந்திய மேலாண்மைக்கும், இறையாண்மைக்கும் எதிராக இலங்கை அரசுகள்தான் தொடர்ந்து செயற்பட்டு வந்துள்ளன. காலகாலமாக இந்தியாவின் விரோத சக்திகளுடன் தான் இலங்கை அரசுகள் நட்பு பாராட்டி வந்துள்ளன. சீனா - பாகிஸ்தான் போன்ற நாடுகளுடன் நெருங்கிய உறவை இலங்கை அரசுகள் கொண்டிருந்ததோடு மட்டுமல்லாது, அமெரிக்காவின் மேலாண்மையை, தென் கிழக்காசியப் பகுதிகளில் மேலோங்கச் செய்வதற்கும் இலங்கை உதவி செய்து வந்துள்ளது.

ஆனால், தமிழீழத்தவரின் விடுதலைப் போராட்டம் இந்தியாவிற்கு உண்மையிலேயே நன்மையைத்தான் அளித்துள்ளது. சரியாக சொல்லப் போனால் தமிழீழ விடுதலைப் புலிகளினால் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகள் இந்தியாவின் பிராந்திய மேலாண்மைக்குத் துணையாகத்தான் இருந்துள்ளது. இன்று தமிழர் தேசம், தனது நிலப் பரப்புக்களைத் தம்மிடமே தக்கவைத்துக் கொண்டிருப்பதனால்தான் இந்தப் பகுதிகளுக்குள் இந்திய விரோத சக்திகள் புக முடியாமல் போயிருந்தால் அந்தப் பகுதிகளையெல்லாம் இந்திய விரோத நாடுகளுக்கு இலங்கை அரசு குத்தகைக்குக் கொடுத்திருக்கும்! இப்பொழுது வாயளவிலும், காகிதத்திலும் போடப்படுவதாகச் சொல்லப்படுகின்ற வெளிநாட்டு ஒப்பந்தங்கள் முழுமையாகச் செயற்படுத்தப்பட்டு, இலங்கைத்தீவின் கரையோரப் பகுதிகளில், இந்திய விரோத சக்திகள் தான் குடியிருந்திருக்கும்.!

பல்வேறு சமயங்களிலும் தொடர்ந்தும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம், இந்தியா குறித்தும், இந்தியாவுடனான நட்புறவு குறித்தும் வெளியிட்ட கருத்துக்களை நாம் மீண்டும் இப்போது குறிப்பிட விரும்புகின்றோம். தமிழீழ விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு வருமாறு:-

'இந்தியாவின் பிராந்திய மேலாண்மைக்குப் பங்கம் விளைவிக்க விடுதலைப் புலிகள் விரும்பவில்லை.'

'இந்தியாவின் இறையாண்மைக்கும், இந்திய நாட்டிற்கும், இந்திய மக்களுக்கும் விடுதலைப்புலிகள் எதிரானவர்கள் அல்ல'.

'இந்தியாவின் தேசிய நலன்களுக்கு விடுதலைப்புலிகள் தடையாக இருக்கப் போவதில்லை'.

'இந்தியாவின் புவியியல் கேந்திர நலனுக்கு எதிராக பொருளாதார நலன்களுக்கு எதிராக, விடுதலைப் புலிகள் செயற்படுபவர்கள் அல்லர்.'

'இந்தியவின் பிராந்திய அரசியல் களத்தில் குழப்பம் எதையும் விளைவிக்க விடுதலைப் புலிகள் விரும்பவில்லை' 'இந்தியாவுடன் நல்லுறவைப் பேணி நட்புறவோடு இணங்கிச் செயற்படவே விடுதலைப் புலிகள் மனப்பூர்வமாக விரும்புகிறார்கள்.' 'இந்தியாவை ஒரு நட்புச்சக்தியாக-நேச சக்தியாகவே விடுதலைப் புலிகள் கருதுகிறார்கள்.'

இப்படிப்பட்ட நிலையில், இந்தியாவின் முன்னைய அரசால் விடுதலைப் புலிகள் மீதான தடை நீடிக்கப்பட்டுள்ள வேளையில் இந்தியாவின் புதிய அரசு ஆக்கபூர்வமானதும், நியாய பூர்வமானதுமான முடிவுகளை எடுக்கும் என்று நாம் நம்புகின்றோம். ☆

# தன் மீதான கொலை முயற்சிக்கும் பாகிஸ்தான் படையினருக்கும் தொடர்பு

## ஜனாதிபதி முஷாரப் தெரிவிப்பு



பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப் மீது கடந்த வருடம் டிசம்பர் மாதம் மேற்கொள்ளப்பட்ட கொலை முயற்சியில் பாகிஸ்தானின் கீழ்மட்ட படையினருக்கும், விமானப் படையினருக்கும் தொடர்பிருப்பதாக ஜனாதிபதி முஷாரப் தெரிவித்துள்ளார்.

இராணுவத்தின் கீழ்மட்டத்தில் கடமையாற்றும் படையினர் பலர் இந்தக் குற்றச்சாட்டுத் தொடர்பாகக் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கடநத் வருடம் டிசம்பர் மாதம் இரு தடவைகள் முஷாரப் மீது கொலை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஜனாதிபதி முஷாரப்பின் பிரயாணம் தொடர்பான திட்டங்களை தாக்குதலை மேற்கொண்டவர்கள் எவ்வாறு அறிந்திருந்தனர் என கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

மேலும், சந்தேகத்தின் பேரில் 10 இராணுவத்தினர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும், இவர்கள் அனைவரும் உயர்மட்ட அதிகாரிகள் அல்ல எனவும் இராணுவப் பேச்சாளர் சயுகட் சுல்தான் செய்தி நிறுவனமொன்றுக்கு தெரிவித்தார்.

நேற்று ஒளிபரப்பப்பட்டிருந்த தொலைக்காட்சிப் பேட்டிக்குக் கருத்துத் தெரிவித்த முஷாரப் - கொலை முயற்சிகள் சிறந்த முறையில் விசாரிக்கப்பட்டுள்ளதாகவும், அல் கொய்டா தீவிரவாத அமைப்பினர் தன் மீதான கொலைமுயற்சிக்கு திட்டங்களைத் தயாரித்திருந்தனர் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை, பாகிஸ்தான் அதிபர் முஷாரப் மீது கொலை முயற்சியை மேற்கொண்டவர்களுக்கு இம்



முயற்சிக்கு பின்னணியாக உள்ளவர்கள் தொடர்பான விபரங்கள் எதுவும் தெரியாதிருக்கலாமெனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

# காஸாவிலிருந்து படைகளை விலக்கல் பிரதமர் ஷரோன் புதிய மசோதாவை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கவுள்ளார்



இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷரோன் காஸாப் பிரதேசத்தில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினரை அகற்றுவது தொடர்பாக முன்னர் இஸ்ரேல் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த மசோதா ஆளும் லிகுட் கட்சியினர் எதிராக வாக்களித்திருந்தமையால் நிறுத்தப்பட்டிருந்தது.

ஆனால், சில மாற்றங்களுடன் மசோதா ஒன்றை மீண்டும் பிரதமர் ஷரோன் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கவுள்ளார். இதற்கான வாக்களிப்பு நாளைமறுதினம் நடைபெறவுள்ளது. புதிய மசோதாவின் மூலம் காஸாப் பிரதேசத்திலிருந்து இராணுவத்தினரின் வெளியேற்றம் படிப்படியாக நடைபெறவுள்ளது.

இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷரோனின் இந்தத் திட்டத்திற்குப் பொதுமக்களிடையே அதிக வரவேற்புக் காணப்பட்டது. அத்துடன், புதிய திட்டம் நான்கு படிகளாக செயற்படவுள்ளது. நான்கு முதல் ஏழு மாதங்களில் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இஸ்ரேலுக்கு அச்சுறுத்தல் என கருதப்படும் குடியிருப்புக்கள் இந்தக் காலப்பகுதியில் அகற்றப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, இஸ்ரேலின் போர் நடவடிக்கைகள் புதன்கிழமையும் காஸாப் பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

ரபாவில் இஸ்ரேலியப் படையினரின் தாக்குதலில் பலஸ்தீனர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். சூபா என்ற நகரில் கொல்லப்பட்டவரின் உடலை அம்புலன்ஸ் வண்டி அகற்றியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.




# அல் கொய்டா அமைப்பின் தாக்குதல் தொடர்பாக தெரிந்தும் புஷ் நடவடிக்கை எடுக்கவில்லை

## அமெரிக்க சட்டமா அதிபர் குற்றச்சாட்டு



(வொஷிங்ரன்)

அமெரிக்கா மீது அல் கொய்டா அமைப்பு தாக்குதல் நடத்துவதற்கான சாத்தியங்கள் தெரிந்திருந்தும் அதிபர் புஷ், அவற்றைப் பரிசீலித்து உரிய முறையில் செயற்படவில்லை என அமெரிக்காவின் சட்டமா அதிபர் - அமெரிக்க ஜனாதிபதி புஷ் மீது குற்றம்சாட்டியுள்ளார்.

அமெரிக்காவிற்கு அச்சுறுத்தலாக இருப்பவர்கள் எனக் கருதப்படும் ஏழு பேரின் பெயர்களையும், அமெரிக்க சட்டமா அதிபர் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ளார்.

இவ்வாறு வெளியிடப்பட்டவர்களின் பெயர் விபரங்களுடன் அவர்களது படங்களும் வெளியிடப்பட்டுள்ளன. இவற்றில் ஒரு பெண்ணும் அடங்குவார்.

இவர்களைக் கண்டுபிடிப்பதற்கு பொதுமக்களின் உதவியும் கோரப்பட்டுள்ளது. இவர்களில் சிலர் அமெரிக்கப் பிரஜைகள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களில் அகமட் சுல்பான் கைலானி, பசுல் அப்துல்லா மொகமட் இருவரும் கிழக்கு ஆபிரிக்காவில் அமைந்துள்ள அமெரிக்கத் தூதரகம் மீது 1998 ஆம் ஆண்டு நடைபெற்ற குண்டுத்தாக்குதலில் சம்பந்தப்பட்டவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அல் கொய்டா அமைப்பினர் தற்போது தமது தந்திரோபாயங்களை மாற்றியுள்ளதாகவும், அந்த அமைப்பின் உறுப்பினர்கள் தமது குடும்பத்துடன் அமெரிக்காவுக்கு பயணங்களை மேற்கொள்வதாகவும் சட்டமா அதிபர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, அமெரிக்காவின் பாதுகாப்புத் தொடர்பாக அதிபர் புஷ் என்ன நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார் என அமெரிக்க ஜனாதிபதி பதவிக்கு போட்டியிடவுள்ள ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஜோன் ஹெரி கேள்வி எழுப்பியுள்ளார்.

அத்துடன், அமெரிக்காவின் ரயில் சேவை, தொழிற்சாலைகள் போன்றவற்றுக்கும் நாட்டிற்குள் வரும் கொள்கலன்கள் போன்றவற்றுக்கும் போதிய பாதுகாப்பு எதுவும் வழங்கப்படவில்லை எனவும் ஹெரி மேலும் தெரிவித்தார்.

# நிலக்கரி சுரங்க குண்டுவெடிப்பில் 15 பேர் பலி

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் உள்ள நிலக்கரி சுரங்கத்தில் குண்டுவெடித்து 15 பேர் பலியாகினர்.

தென்மேற்கு பாகிஸ்தானிலிருந்து சுமார் 50 மீற்றர் தொலைவில் உள்ள கொயட்டா நகரிலுள்ள சஜிபி என்ற இடத்திலேயே இக் குண்டுவெடிப்பு நிகழ்ந்தது. இதனால் அந்த சுரங்கத்தில் வேலை செய்து கொண்டிருந்த 15 பேர் சம்பவ இடத்திலேயே இடிபாடுகளில் சிக்கி உடல் நசுங்கி உயிரிழந்தனர்.

இதுவரை 3 பேரின் உடல்கள் மீட்கப்பட்டிருப்பதாகவும், இன்னும் 12 பேரின் உடல்கள் சுரங்க இடிபாடுகளுக்குள் புதையுண்டிருப்பதாகவும் மீட்புப் பணி தொடர்ந்து நடைபெற்றுவருவதாகவும் பாகிஸ்தான் அரசின் செய்தித் தொடர்பாளர் மக்பூல் அகமட் தெரிவித்தார்.

# பாகிஸ்தான் நகர் கராச்சியில் இரு கார்க்குண்டு தாக்குதல்கள்

## ஒரு பொலிஸ் பலி, 25 பேர் படுகாயம்



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் கராச்சி நகரில் நேற்றுமுன்தினம் இரு கார்க்குண்டுத் தாக்குதல்கள் நிகழ்ந்துள்ளன. இத் தாக்குதலில் பொலிஸார் ஒருவர் கொல்லப்பட்டதுடன் 25 பொதுமக்கள் காயமடைந்தனர்.

ஆங்கில கல்வி நிறுவனமொன்றிற்கு வெளியே முதலாவது கார்க் குண்டு வெடித்துள்ளது. மற்றுமொரு கார்க்குண்டு நிறுத்தப்பட்ட கார் ஒன்றிலிருந்து வெடித்துள்ளது.

இந்தக் குண்டுத்தாக்குதல்கள் அமெரிக்க தூதரக அதிகாரியின் காரியாலயத்திற்கும், வீட்டிற்கும் முன்னால் அமைந்துள்ள பிரதேசத்தில் நிகழ்ந்துள்ளன.

இதன்பின்னர் அந்தப் பிரதேசத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. கார்க்குண்டுத் தாக்குதலில் காயமடைந்த 25 பேர்களில் 10 பத்திரிகையாளர்களும் அடங்கியுள்ளனர்.

குண்டுத்தாக்குதலில் சம்பந்தப்பட்டிருந்த முதலாவது காரில் அரசாங்க சின்னம் பொறிக்கப்பட்டிருந்ததால் காரின் மீது சந்தேகம் ஏற்படவில்லையென பி.பி.சி.யின் போல் அன்டர்சன் தெரிவித்தார்.

இதேவேளை, ரொய்ட்டர் செய்தியாளர் தெரிவித்த கருத்தில், பலத்த ஒலியுடன் கார்க்குண்டு வெடித்தது எனவும், மக்கள் தலை, உடல் ஆகிய பகுதிகளில் இரத்தக் காயங்களுடன் காணப்பட்டதாகவும் குறிப்பிட்டார்.



இந்தத் தாக்குதல் யாரால் நடத்தப்பட்டதென்பது இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. இந்தத் தாக்குதலை பாகிஸ்தான் தகவல் தொடர்பு அமைச்சர் வன்மையாக கண்டித்துள்ளார்.

பயங்கரவாதத்திற்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும், அப்போது அவர்கள் மகிழ்வாக இருக்க மாட்டார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.


மெகா

கொம்ப்யூட்டர் கற்கை நெறிகளுக்கான

இலவச புலமைப்பரிசில் பரீட்சை 5-6-2004

Diploma in Computer Software Engineering 1 DCSE

Professional Diploma in Graphic Design 2 PDGD

Diploma in Web Multimedia 3 DWM

Advanced Diploma in Visual Programming 4 ADVP

Diploma in Office Automation 5 DOA

Advanced Diploma in Digital Design 6 ADDD

யாழ் குடா நாட்டில் முதன்முறையாக ஏசியன் கொம்ப்யூட்டர்ஸ் நடாத்தும் இப்புலமைப்பரிசில் பரீட்சையில் பங்குபற்றி 2004 - 2005 கல்வி ஆண்டிற்கான சமகால தொழில்சார் கணனி கற்கை நெறிகளில் ஒன்றை தெரிவு செய்து முறையே 40%, 50%, 60% மற்றும் 75% வரையிலான சிறப்புப் புலமைப்பரிசில்களை பெற்றுக்கொள்ளலாம். எமது பாடநெறிகள் அனைத்தும் இங்கிலாந்து ICM, ACP, IMIS மற்றும் CSC, TATA இந்திய உயர்கல்வி நிலையங்களின் நேரடி அங்கீகாரம் பெற்றவை.

இத்திட்டத்தில் யார் பங்குபற்றலாம் ?

மொழி, வயதெல்லை, முன் அனுபவம் தராதரம் என்ற பாகுபாடின்றி கொம்ப்யூட்டர் கல்வியில் ஆர்வமுடைய அனைவருக்கும் மற்றும் குறிப்பாக இம்முறை A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கும் ஓர் சந்தர்ப்பம் அளிப்பதுடன் சிறப்புக் கட்டணக் கழிவையும் வழங்குவதே இப்புலமைப்பரிசில் திட்டத்தின் உயரிய நோக்கமாகும்.

இலவச பரீட்சைகள்

5-6-2004 சனிக்கிழமை நடைபெறும் இப்புலமைப்பரிசில் பரீட்சை பொது அறிவு மற்றும் O/L பாடத்திட்டத்தை சார்ந்ததாக தமிழ் மொழியில் நடைபெறும்.

இலவச அனுமதி

இப்புலமைப்பரிசில் பரீட்சை முற்றிலும் இலவசம். யாழ்நகர், சுண்ணாகம் மற்றும் நெல்லியடியில் உள்ள எமது பயிற்சி நிலையங்களில் இலவச அனுமதி அட்டைகளையும், பரீட்சை பற்றிய விபரங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

ASIAN COMPUTER SYSTEMS

| யாழ்ப்பாணம் | சுண்ணாகம் | நெல்லியடி |
|---|---|---|
| 2 G,ஸ்டான்லி வீதி,யாழ்ப்பாணம். | பிரசன்னா கொம்ப்யூட்டர்ஸ் | கொடிகாமம் ரோட், நெல்லியடி. |
| Tel:021-222 5677 | K. K. S. வீதி, சுண்ணாகம். | (கரவெட்டி தபாலகத்திற்கு முன்பாக) |

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# கோதுமை மாவின் விலை உடனடியாக அதிகரிக்காது!

## பிரீமா நிறுவனம் தெரிவிப்பு

(கொழும்பு)

மக்களுக்கும் மற்றும் அரசாங்கத்திற்கும், அசௌகரியத்தை ஏற்படுத்தும் வகையில் கோதுமை மாவின் விலை உடனடியாக அதிகரிக்கப்படமாட்டாதென பிரீமா நிறுவனம் நேற்று அறிவித்தது.

இந்த விலை அதிகரிப்பு தொடர்பாக அரசாங்கத்துடன் தற்போது பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருவதாக தெரிவித்த பிரீமா நிறுவன அதிகாரி - பேச்சுவார்த்தையின் பின் இது தொடர்பாக குறுகியகால நடவடிக்கை ஒன்று எடுக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

அத்துடன், அரசாங்கம் பிரீமா நிறுவனத்திற்கு மானியமாக வழங்க வேண்டிய 90 மில்லியன் ரூபாவினை இதுவரை வழங்கவில்லை. இவ்வாறு வழங்கவேண்டிய மானியத் தொகையை அரசாங்கம் வழங்குமாக இருந்தால், கோதுமை மாவின் விலையை அதிகரிக்கவேண்டிய அவசியமில்லை.

வழங்க வேண்டிய மானியத் தொகை குறித்து நாம் திறைசேரியுடன் தற்போது பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகிறோம் எனவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

பிரீமா நிறுவனம் பலமாதங்களுக்குத் தேவையான கோதுமை மாவினை களஞ்சியப்படுத்தி வைத்துள்ளதாகவும், தற்போதைய அரிசி விலை ஏற்றத்தினால் மக்களிடையே மாவின் கொள்வனவு மற்றும் பாவனை அதிகரித்துள்ளதெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# புனர்வாழ்வு பணிப்பாளர் ஹரீம் பீரிஸ் கிளிநொச்சிக்கும் விஜயம் செய்தார்!

(கொழும்பு)

ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளரும், புனர்வாழ்வு புனரமைப்பு நல்லிணக்க அமைச்சின் பணிப்பாளருமான ஹரீம் பீரிஸ் நேற்று கிளிநொச்சியில் அபிவிருத்திப் பணிகள் தொடர்பாக ஆராய்ந்துள்ளார்.

கடந்த புதன்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்த அவர் ஏ-9 வீதியூடாக கிளிநொச்சிக்குச் சென்றிருந்தார்.

நேற்றுக்காலை கிளிநொச்சி அரச செயலகத்தில் அரசாங்க அதிகாரிகளைச் சந்தித்து பேசிய பின்னர், தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் கிளிநொச்சி அலுவலகம் சென்று அங்கும் கலந்துரையாடல் ஒன்றை நடத்தியுள்ளார்.

தொடர்ந்து வெண்புறா செயற்கை உறுப்பு தயாரிக்கும் மையத்துக்கு சென்று அவர்களது செயற்பாடுகளைப் பார்வையிட்டதுடன், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரின் தொழிற பயிற்சி நிலையங்களையும் அங்கு அளிக்கப்படும் பயிற்சிகளையும் பார்வையிட்டார்.

அவர் நேற்றுமாலை 4.30 மணியளவில் ஓமந்தையூடாக வவுனியா சென்று அங்கிருந்து கொழும்புக்கு பயணித்துள்ளார். இவர் கிளிநொச்சியில் தங்கியபோதும், தமது பயணங்களை மேற்கொண்டபோதும், தமிழீழ காவல்துறையினர் பாதுகாப்பு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

## படைச்சிப்பாய் புலிகளால் விடுதலை

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் அத்துமீறி உட்பிரவேசித்தவேளை - புலிகளால் கைதுசெய்யப்பட்டிருந்த படைச் சிப்பாய் ஒருவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

கடந்த வருடம் ஏப்ரல் மாதம் மணலாறுப் பிரதேசத்தில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் உட்பிரவேசித்த ஜி.டபிள்யூ.பியசேன என்ற படைச்சிப்பாயே விடுவிக்கப்பட்டவராவார்.

விடுதலைப் புலிகளால் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த இந்தச் சிப்பாயை, கண்காணிப்புக் குழுவினர் இராணுவத்தினரிடம் ஒப்படைத்ததாகத் தெரியவருகிறது.

# ஆசிய அபிவிருத்தி வங்கிக் குழுவினர். யாழின் உடனடித் தேவைகள் குறித்து அரச அதிபருடன் ஆராய்ந்தனர்

யாழ்.குடாநாட்டில் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து ஆசிய அபிவிருத்தி வங்கியின் உபதலைவர் தலைமையிலான உயர்மட்ட அதிகாரிகள் அரச அதிபரைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

நேற்றுக் காலை பலாலி விமான நிலையத்தை வந்தடைந்த ஆசிய அபிவிருத்தி வங்கியின் உபதலைவர் லிகியுநீன் தலைமையிலான குழுவினர் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் நேரில் சென்று அபிவிருத்தித் திட்டங்களை பார்வையிட்டனர்.

கடந்த கால யுத்த நடவடிக்கையின் போது சேதமடைந்த தொண்டமனாறு பாலத்தினை நேரில் சென்று பார்வையிட்டனர்.

வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரியில் நிகொட் நிறுவனத்தின் நிதியுதவியில் புதிதாக அமைக்கப்பட்ட கட்டடத்தை திறந்துவைத்தனர்.

தொடர்ந்து தென்மராட்சிப் பிரதேசத்திற்குச் சென்ற உலகவங்கிக் குழுவினர் சாவகச்சேரி வைத்தியசாலையில் அமைக்கப்பட்ட விடுதி ஒன்றையும் திறந்து வைத்தனர்.

நேற்று நண்பகலில் யாழ்.செயலகத்திற்கு சென்று குடாநாட்டின் தேவைகள் குறித்து அரச அதிபருடன் கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பின் போது அபிவிருத்தித் திட்டங்களில் உடனடியாக முன்னெடுக்கப்பட வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் குறித்தும், தற்போது உலக வங்கியின் நிதியுதவியுடன் நடைபெற்றுவரும் வேலைத் திட்டங்களின் முன்னேற்றங்கள் குறித்தும் ஆராயப்பட்டதாக யாழ்.செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (29,34)

### வெளிப்படையான...

முடிவு செய்துள்ளதாக ஜனாதிபதி தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

தற்போது எழுந்துள்ள தற்காலிக நெருக்கடிகளை விரைவில் சீர்செய்து மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிக்க வழி செய்யும்படி நோர்வே பிரதிநிதிகளிடம் ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்ததுடன், விரைவில் மீளவும் இரு பகுதியினரிடமும் பேசி இறுதி முடிவுகளை எடுக்கும்படியும் கேட்டுக்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, ஜனாதிபதியுடனான சந்திப்பின் பின் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவித்த சொல்ஹெய்ம் - இன்றைய ஜனாதிபதியுடனான சந்திப்பு சமாதான முயற்சிக்கு புதிய உத்வேகத்தைக் கொடுப்பதாக அமைந்துள்ளது என தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் - இன்றைய ஜனாதிபதியுடனான சந்திப்பு எமக்கு சமாதான முயற்சியில் புதிய நம்பிக்கையையும் உத்வேகத்தையும் தருவதாக அமைந்துள்ளது. விடுதலைப் புலிகள் கேட்டுக்கொண்ட சில விடயங்களுக்கு ஜனாதிபதி நல்ல பதில் தந்திருக்கிறார்.

அடுத்தகட்ட நடவடிக்கையாக இரு தரப்பினருக்குமிடையேயான சந்திப்பைப் பற்றிப் பேச்சு நடத்த வேண்டியுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். இன்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை சொல்ஹெய்ம் சந்தித்துப் பேசவுள்ளார்.

### நிவாரணம்...

இல்லையேல் அரசாங்க செயலகம் முன் போராட்டம் நடத்தப்படும் எனவும் பொது அமைபபுக்களின் ஒன்றியம் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் ஜனாதிபதியின் பிரத்தியேக உதவியாளரும், நிவாரணம் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் ஆணையாளர் நாயகம் ஹரீம் பீரிஸ் கலந்து கொண்டார்.

பல பொது அமைப்புக்களின் வேண்டுகோளை ஏற்று மாற்று ஏற்பாடு செய்யப்படும் வரை வழமை போன்று அனைவருக்கும் நிவாரணம் வழங்குவதென அரச அதிபரும், ஹரீம் பீரிஸும் கூட்டாகத் தெரிவித்தனர்.

நிவாரணம் வழங்குவதில் மேலும் இழுத்தடிப்பு செய்து காலம் தாழ்த்தப்படின் மாவட்ட அரசாங்க செயலகம் செயலிழக்கும் வகையில் தொடர் போராட்டங்கள் பொதுமக்களின் உதவியுடன் நடத்தப்படுமென யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சுவர்...

க.சுலக்சனா, க.பகீரதன் இருவரும் மேலதிக சிகிச்சைக்காக கண்டி வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

மழை பெய்து கொண்டிருந்த வேளை வீட்டினுள் இவர்கள் அனைவரும் இருந்த வேளையிலேயே இந்தத் துயரச் சம்பவம் நடைபெற்றது.

### இரண்டு...

நேற்றுமுன்தினம் காட்டுப் பகுதிக்கு விறகு வெட்டச் சென்ற சமயமே இவர்கள் இருவரும் காணாமற் போயுள்ளனர். இந்தப் படையினர் இருவரும் காணாமற்போனமை தொடர்பாக படைத்தரப்பு போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் அறிவித்துள்ளது. (01)

# பணமோசடியில் ஈடுபட்டவருக்கு இருவருட கடூழியச் சிறைத்தண்டனை

## யாழ்.மாவட்ட நீதிவான் உத்தரவு

காசோலை மோசடியில் ஈடுபட்ட சிற்றூழியருக்கு இரண்டு வருட கடூழியச் சிறைத்தண்டணை விதிக்கப்பட்டது.

குறிப்பிட்ட ஒரு உத்தியோகத்தருக்குரிய 9 ஆயிரத்து நானூற்று ஐந்து ரூபா காசோலையில் பொய்யான கையெழுத்திட்டு, அவரது பணத்தைக் களவாடியமைக்காகவே இந்த தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

யாழ். பிரதேசசெயலகத்தில் சிற்றூழியராகப் பணிபுரிந்த ஒருவரே இந்தக் காசோலை மோசடியில் ஈடுபட்டுள்ளார்.

யாழ். பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, யாழ்.மாவட்ட நீதிவான் ஆர்.ரி.விக்கினராஜா இவருக்கு மூன்றாண்டுகள் ஒத்திவைக்கப்பட்ட இரண்டாண்டு கடூழியச் சிறைத்தண்டனையை விதித்து தீர்ப்பளித்தார். (ப)

# பாலியல் வல்லுறவு புரிந்தவருக்கு 11 வருடங்கள் சிறைத்தண்டனை!

## வவுனியா நீதிமன்றம் உத்தரவு

(வவுனியா)

வவுனியா வாரிக்குட்டியூர் பகுதியில் 16 வயதுச் சிறுமியை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய இளைஞனுக்கு 11 ஆண்டுகள் சிறைத் தண்டனையை வவுனியா மாவட்ட மேல்நீதிமன்றம் விதித்தது.

கொடிகாமத்திலிருந்து இடம் பெயர்ந்து வவுனியா - வாரிக்குட்டியூர் பகுதியில் வசித்து வந்த மேற்படி சிறுமி மீது, அதே இடத்தில் வசித்து வந்த 23 வயதுச் சிறுவன் கடந்த வருடம் பாலியல் வல்லுறவு புரிந்ததாக வவுனியா மேல்நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கினை விசாரித்து வந்த வவுனியா மாவட்ட மேலதிக நீதிவான் ஜே.விஸ்வநாதன், நேற்று முன்தினம் இதற்கான தீர்ப்பை வழங்கினார்.

இந்த தீர்ப்பில் குற்றவாளிக்கு 11 வருடச் சிறைத்தண்டனையும், பாதிக்கப்பட்ட சிறுமிக்கு ஐயாயிரம் ரூபா பணமும் செலுத்துமாறும் நீதிவானால் உத்தரவிடப்பட்டது. (03)

# திருமலையில் வீதியை மூட கடற்படையினர் முயற்சி

(திருகோணமலை)

திருமலை கடற்படைத் தளத்தினை அண்மித்த வீதி ஒன்றினை மக்கள் பாவனைக்குத் தடைசெய்யும் முயற்சியில் கடற்படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

திருகோணமலைக் கடற்படைத் தளத்தின் எல்லைப்பிரதேசமான மனையாவெளிப் பகுதியில் அமைந்துள்ள வீதி ஒன்றினையே பொதுமக்கள் பாவனைக்குத் தடைசெய்யும் நடவடிக்கையில் கடற்படையினர் ஈடுபட்டுள்ளனர்.

இவ் வீதியினைப் பொதுமக்கள் பயன்படுத்துவதைத் தடைசெய்ய கடற்படையினர் கொங்கிறீட் தூண்களையும், முட்கம்பி வேலிகளையும் அமைத்து வருகின்றனர்.

இப்பகுதிக்குள் குளம் ஒன்று அமைந்திருப்பதால், அக்குளத்தை நம்பிச் சலவைத் தொழிலில் ஈடுபடும் குடும்பங்கள் பெரும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளன.

தற்போதைய சமாதான சூழ்நிலையில் கடற்படையினரின் இத்தகைய செயற்பாடுகள் பொதுமக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. (10)




இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 28.05.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.